# க/தலாத்துஓயா

# தமிழ் மகா வித்தியாலயம்

## தலாத்துஓயா



# முத்தமிழ் நாதம்

# 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# Jayanthys

*Wholesale & Retail Dealers in Textiles*

**# 106, Colombo Street,**
**Kandy.**

**Tel:081-2222464**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் நாதம்
# 2012

*தூரநோக்கு*

மாற்றமுறும் உலகிற்கேற்ப தேர்ச்சி பொருந்திய
தரமான கல்விச் சமூகம்

*பணிக்கூற்று*

வினைத்திறனும் விளைதிறனும் மிக்க கல்வியைப்
பெறுவதன் மூலம் செயல் துடிப்புள்ள
மாணவரை உருவாக்குதல்

## க/தலாத்துஓயா தமிழ் மகா வித்தியாலயம்
## தலாத்துஓயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# S.P.S ENTERPRISES

*Importers & General Hardware Merchants*

**355-1/4, Old Moor Street,**
**Colombo - 12**
**Tel: 011 - 2470970, 011 - 4713399**
**Fax: 011 - 2470970**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

காதொளிரும் குண்டலத்தாள்
கனி மொழியாள் வாழ்க
கைக் குவளையாபதி கொள்
கன்னிகையாள் வாழ்க

மேதகு மென் மார்பிடைச்
சிந்தாமணியாள் வாழ்க
மின்னுமணி மேகலை சூழ்
மெல்லிடையாள் வாழ்க

சீதமலர்ப் பாதமொலிச்
சிலம்புடையாள் வாழ்க
சேர, சோழ, பாண்டியர் தம்
செல்வ மகள் வாழ்க

நீதியுறும் செங்கோலாய்த்
தூய குறள் தாங்கும்
நிகரறியாச் செந்தமிழ்த் தாய்
நீடூழி வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை கீதம்

தலாத்து ஓயா நகரிலே ஆயகலைகள் வளர
தூய கலாசாலை தனில் ஓயாதுழைப்போமே

மலைவளத்தின் மத்தியில்
மழை பொழியும் பூமியில்
கலை வளர்த்துக் காத்திடும்
கலாசாலை வளரவே

(தலா.......)

ஒற்றுமையைப் பேணிடும்
உயர்ந்த கலாசாலையில்
கற்றுணர்ந்த யாவையும்
கருத்திற் கொண்டு வாழுவோம்

(தலா.......)

நெறிவழியே நடத்துவார்
நேயமுடன் அதிபரும்
அறிவொளியைப் புகட்டுவார்
அன்புமிக்க ஆசானும்

(தலா.......)

கல்வி அறிவு வளர்த்திடும்
கலாசாலை வளரவே
எல்லாம் வல்ல இறைவனை
இறைஞ்சி நின்று பாடுவோம்

(தலா.......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ASSISTANT HIGH COMMISSIONER OF INDIA
Kandy - Sri Lanka.

31, Rajapihilla Mawatha,
P.O. Box 47, Kandy (Sri Lanka)
Tel: + 94 81 2234545,
Fax: + 94 81 2232479
E-mail: ahciknd@sltnet.lk



# MESSAGE

It is with great pleasure that I send this Message on the occasion of the Prize Giving Ceremony which is being organized by K/Talatuoya Tamil Maha Vidyalayam, Talatuoya, Central Province.

I am absolutely confident that K/Talatuoya Tamil Maha Vidyalayam must be providing a complete, meaningful and a sound education to its students' community so that they are intellectually well trained, morally upright, socially aware and spiritually inspired.

On this auspicious occasion, I would like to congratulate and compliment the Principal, the Teacher community and the beloved students of the Vidyalayam every success in their endeavours.

With all best wishes,

**A.Natarajan**
Assistant High Commissioner




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


*With Best Compliments From:*



# NEW LEE MEDICAL

**(Druggists, Chemists, Grocers)**





**100, Dalada Veediya,**
**Kandy.**

**Tel: 081 - 2229168**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபரின் அறிக்கை

எனது அன்புக்குரிய அழைப்பை ஏற்று இவ் விழாவினைச் சிறப்பிக்க வந்திருக்கும் பிரதம அதிதி ஸ்ரீ A. நடராஜன் அவர்களே, கௌரவ அதிதியாக வந்திருக்கும் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் திரு. P. சதீஸ் அவர்களே, வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. M.W. விஜேயரதன அவர்களே, சிறப்பு அதிதியாக வந்திருக்கும் மேலதிக வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. P. ஸ்ரீதரன் அவர்களே, பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு. N. லோகநாதன் அவர்களே, ஏனைய கல்வி அதிகாரிகளே, ஏனைய பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே, வர்த்தகப் பிரமுகர்களே, மாணவர்களே, பெற்றோர்களே, பழைய மாணவர்களே, உங்களனைவரையும் வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

2012ம் ஆண்டு நவம்பர் மாதம் 1ம் திகதி வியாழக்கிழமை ஆகிய இன்று எமது பாடசாலையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பரிசளிப்பு விழாவில் எமது பாடசாலையின் கடந்த கால வளர்ச்சிபற்றி நோக்குமிடத்து, கண்டி மாநகரின் எழில் கொஞ்சும் நகரமாகத் திகழ்ந்து வந்தது இத் தலாத்துஓயா நகரமாகும். இந் நகரத்தில் இன்று தனித்தமிழ்ப் பாடசாலையாக தலாத்துஓயா தமிழ் மகா வித்தியாலயம் விளங்குகின்றது.

ஆரம்ப காலத்தில் இங்கு வாழ்ந்த மக்கள் கல்வி கற்பதற்கான வசதிவாய்ப்புக்கள் மிகவும் குறைவாகவே காணப்பட்டன. அக்குறைபாட்டினை நிவர்த்தி செய்வதற்கு "நிக்கத்தன்னைப்" பிரதேசத்தைச் சேர்ந்த திரு. இராமையா இராஜப்பிரியர், திரு. மயில்வாகனம் ஆகியோர்களது தீவிர முயற்சியின் பயனாக அன்றைய இந்திய ஏஜென்டாக விளங்கிய திரு. டி.எல்.ஆர். சந்திரன் தலைமையில் "பின்னக்கொல்லயில்" தமிழ்மொழித் தொடக்கப்பள்ளிக்கென அடிக்கல் நாட்டப்பட்டதாகவும், துரதிருஷ்டவசமாக அவ் அடிக்கல் அக் காணிக்குரியவரால் ஓரிரு தினங்களிலேயே அகற்றப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனைத் தொடர்ந்து இப்பிரதேச மக்களின் வேண்டுதலை ஏற்றுக் கொண்ட, 1948ம் ஆண்டு கௌரவ டி.எஸ். சேனநாயக்கவின் அமைச்சரவையில் கல்வி அமைச்சராகப் பணியாற்றிய திரு. நுகவெல அவர்களினால், கல்வியமைச்சின் அனுமதியுடன் தற்போது ஹேவாஹெட்ட மத்திய கல்லூரியாகத் திகழும் பாடசாலையானது, அக்காலப் பகுதியில் தலாத்து ஓயா இருமொழிப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இக் காலப்பகுதியில் அரசசபை உறுப்பினரும் சுகாதார அமைச்சராகவும் இருந்த திரு. ஜோர்ஜ் ஈ. டி. சில்வா அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியுடன் திரு. செ. கோவிந்தசாமி என்பவர் தமிழ்மொழி மூலத் தொடக்கப்பள்ளியை அமைக்க உதவினார். அவ்வேளை இப்பாடசாலையில் திரு. குருசாமி அவர்களும், அவர் துணைவியாரும் ஆசிரியர்களாகக் கடமையாற்றினர். அவர்களுக்கு திரு. வீரக்கோன் அவர்களும், திரு. நாராயணசாமி அவர்களும் பல உதவிகளைப் புரிந்துள்ளதுடன் இப் பாடசாலை வளர்ச்சிக்கு பல அர்ப்பணிப்புக்களைச் செய்துள்ளனர்.

மேலும் இன்று தலாத்துஓயா தமிழ் மகா வித்தியாலயமாகத் திகழும் இப் பாடசாலை 13-05-1958ம் ஆண்டுக் காலப்பகுதியிலேயே தனித் தமிழ்ப் பாடசாலையாக உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும்.

இக் காலத்தில் குறிப்பாக 1958ல் இப்பாடசாலையில் 285 மாணவர்களும் 1960ல் 300 மாணவர்களும், 1962ல் 350 மாணவர்களும் 1967ல் 400 மாணவர்களும் கல்விகற்றதாகவும், இக் காலப் பகுதியில் கல்வி கற்பதற்கு இடவசதி போதாமையினால் தரம் 1,2,3 ஆகிய ஆரம்பக் கல்வி வகுப்புக்கள் காலையில் ஆறு ஆசிரியர்களுடனும், ஏனைய வகுப்புக்கள் மாலையில் ஆறு ஆசிரியர்களுடனும் இயங்கி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பாடசாலையில் 1973ல் முதன் முதலாக மாணவர்களுக்கான இல்ல விளையாட்டுப் போட்டி ஒன்று நடாத்தப்பட்டது. இது பாடசாலையின் சரித்திரத்தில் முக்கியமான நிகழ்வுகளில் ஒன்றாகும். இதுவரை எமது பாடசாலைக்கான தனியானதொரு விளையாட்டு மைதானம் கல்வியமைச்சினால் வழங்கப்படாத பட்சத்திலும் மாணவர்களின் உடல், உள, மனப்பாங்கு விருத்தியை மேம்படச் செய்யும் பொருட்டு கடந்த 2008, 2009ம் ஆண்டுக் காலப்பகுதிகளில் "பூட்டாவத்தை" எனும் பிரதேசத்தில் சிறப்பான முறையில் இல்ல விளையாட்டுப் போட்டியினை நடாத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. எதிர் வரும் ஆண்டுகளிலும் சிறப்பான முறையில் இல்ல விளையாட்டுப் போட்டியினை நடாத்துவதற்கு நாம் தீர்மானம் எடுத்துள்ளோம்.

அதனைத் தொடர்ந்து 1975ம் ஆண்டு மாணவர் தொகை ஐந்நூறாக உயர்வடைந்தமையினால் இப்பாடசாலையில் புதிதாகப் பாரதியார் மண்டபம் என்ற பெயரில் விளங்கும் இப்பரிசளிப்பு விழா நடைபெறும் மண்டபம் கட்டப்பட்டதுடன், இப்பாடசாலையும் மகா வித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டது.

அடுத்து எமது பாடசாலையின் சரித்திரத்தில் முதற் தடவையாக 1978ம் ஆண்டு பரிசளிப்பு விழா ஒன்று நடாத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து இன்றுவரை இப் பரிசளிப்பு விழா தொடர்ந்து நடாத்தப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கதோர் விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் 1980 ம் ஆண்டுக் காலப்பகுதியில் மத்திய மாகாண இந்து இளைஞர் மன்றத்தினரால் இப் பாடசாலையில் காணப்படும் "சரஸ்வதி மண்டபம்" என்ற கட்டிடத் தொகுதிக்கு கம்பி வலை அடிக்கப்பட்டதுடன் மின்சார வசதியும் பெற்றுக் கொடுக்கப்பட்டது. இவ்வாண்டுக் காலப் பகுதியில் இங்கு கடமையாற்றிய அதிபர் திரு. ஆறுமுகம் அவர்கள் இப் பாடசாலைக் கடமைக் காலத்திலேயே இறையடி சேர்ந்துள்ளார்.

அத்துடன் இக் கல்லூரிக்கு திருமலை இராமலிங்க ரெட்டியார் காலஞ்சென்ற தனது மகனின் நினைவாக பெருமளவிலான இலக்கிய நூல்களுடன் அலுமாரி ஒன்றும் நூலகத்திற்குக் கையளித்துள்ளார்.

கடந்த 2001ம் ஆண்டு மத்திய மாகாண கல்வி அமைச்சராக இருந்த கௌரவ பெ. இராதாகிருஸ்ணன் அவர்கள் எமது பாடசாலைக்கு "றோனியோ" இந்திரம் ஒன்றையும் 2003ம் ஆண்டு சமூக சேவைகள் அமைச்சராக இருந்த கௌரவ பெ. சந்திரசேகரன் அவர்களினால், இரு கணினிகளும் இப்பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ளதையும் நான் நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

மேலும் எமது பாடசாலையில் 2003ம் ஆண்டு ஒரு "பாண்ட் வாத்தியக்குழு" உருவாகியிருந்ததைப் பெருமையுடன் தெரிவிப்பதுடன் அதனைப் பெற்றுக் கொள்வதற்கு உதவி புரிந்த திரு. V. கனகராஜா திரு. P. கந்தகுமார், திரு. P. மணிவண்ணன் ஆகியோருக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றறேன்.

மேலும் கடந்த 2004 - 2006 வரையிலான காலப்பகுதியில் எமது பிரதேச மாகாண சபைத் தலைவராக இருந்த திரு. மகிந்த அபயக்கோன் அவர்களின் சிபாரிசின் பேரில் கண்டி வலயத்திலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் இப்பாடசாலை "நவோதயா" பாடசாலைகளின் அபிவிருத்தித் திட்டத்திற்கு சேர்த்துக் கொள்ளப்பட்டது. இதன் காரணமாக இப்பாடசாலைக்கு சகலவிதமான வளங்களையும் ஜனாதிபதி நிதியத்திலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இத் திட்டத்திற்கமைய எமது பாடசாலைக்கு சுமார் இருபது இலட்சம் ரூபா பெறுமதியான கட்டிடமும் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான நூல்களும், ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான நூலகத்திற்குரிய தளபாடங்களும் கிடைக்கப் பெற்றன. மேலும் இப் பாடசாலைக்கு "சீடா" திட்டத்தின் மூலம் மூன்று மாடிகள் கொண்ட கட்டிடத் தொகுதியொன்றும், மலசல கூடமும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கவையாகும்.

மேலும் எமது பாடசாலையிலிருந்து கடந்த 2007ம் ஆண்டில் இருந்து 2012 ம் ஆண்டுவரையான காலப்பகுதியில் ஏழு மாணவர்கள் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று இப்பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைத் தொடர்ந்து எமது பாடசாலையில் கடந்த 2003ம் ஆண்டிலிருந்து க.பொ.த. உயர் தரத்தில் கலைப்பிரிவிற்கான வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. அவை இன்று வரை வெற்றிகரமாக நடைபெற்றுவருவதுடன் கடந்த 2009ம் ஆண்டு க.பொ.த உ/த பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில், எமது பாடசாலை மாணவிகளாகிய செல்வி. சற்குணன் ஜீவிதா, செல்வி. டிலூசியா மோகனப்பிரியா ஆகியோர் பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பீடத்திற்குத் தெரிவாகி எமது பாடசாலைக்கு மேலும் பெருமை சேர்த்துள்ளதையிட்டு அவர்களை நான் மனதார வாழ்த்துகின்றேன்.

ஆரம்பகாலங்களில் இங்கு ஆரம்பக் கல்வி பயின்ற மாணவர்கள் பலர் கடல் கடந்த நாடுகளிலும் புகழ் பெற்று உயர் பதவிகளை இன்று வகித்து வருகின்றனர். அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளில் உயர் பதவிகளை வகிக்கின்றனர். அது மட்டுமன்றி புகழ் பெற்ற எமது நாட்டின் பேராசிரியர்களுள் ஒருவராக விளங்கும் திரு. மூக்கையா அவர்களும் எமது பாடசாலையின் பழைய மாணவர் என்பதையும் நான் பெருமையுடன் கூறிக் கொள்கின்றேன். அத்துடன் பலர் இன்று கல்விப் பணிகளிலும் தொழிலதிபர் பதவிகளிலும், ஏனைய உயர்பதவிகளிலும் பிரகாசிப்பதற்கு அடித்தளமிட்டது இப்பாடசாலையே என்பதை யாராலும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது என்பதை இவ்வேளை நான் பெருமையுடன் கூறிக் கொள்கின்றேன்.

மேலும் இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் தமிழ் மொழித்திறன் போட்டிகள், அறிவியல் போட்டி நிகழ்வுகள், ஆங்கில தினப் போட்டிகள், கணித விஞ்ஞானப் போட்டிகள், விவேகானந்தர் நிகழ்வுகள், நாட்டிய நிகழ்வுகள் போன்ற பல்வேறு நிகழ்வுகளில் பங்குபற்றியுள்ளதுடன், வலய மட்டத்திலும், மாகாண மட்டத்திலும், அகில இலங்கை ரீதியிலும் பல பரிசில்களைத் தம் வசமாக்கியுள்ளமை இப் படசாலையின் பெருமையைக் காட்டி நிற்கின்றன. எதிர்வரும் காலங்களிலும் இம் மாணவர்களின் திறமையினாலும், இங்கு கல்வி போதிக்கும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்புக்களினாலும் இப்பாடசாலை மேலும் பல்வேறு துறைகளிலும் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் என்பதை நான் உறுதியுடன் கூறுகின்றேன்.

மேலும் இப்பரிசளிப்பு விழாவினைத் திறம்பட நடாத்துவதற்கு சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த தொழிலதிபர்கள் வர்த்தகப் பெருந்தகைகள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைக் கூறிக் கொள்கின்றேன்.

அதிபர்
திரு. V. **தங்கவேல்**
க/தலாத்துஓயா தமிழ் மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

கண்டி வலய தலாத்து ஓயா தமிழ் மகா வித்தியாலய பரிசளிப்பு விழாவை முன்னிட்டு வெளியிடும் மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

பரிசளிப்பு என்பது கல்வித்துறையைப் பொறுத்தவரை மிக மிக அவசியமானதொன்றாகும். ஆசிரியர்களானாலும் சரி மாணவர்களானாலும் சரி அவர்களது செயற்பாட்டினை இனங் கண்டு ஊக்குவிப்பதற்காக பரிசில்கள் வழங்கப்படும் போது அவர்களது செயற்றிறன் மென்மேலும் கூடுகிறது. அதனூடாக பாடசாலையினுடைய இலக்கை நோக்கி ஆளணியினரை நகர்த்திச் செல்வது இலகுவாக இருக்கும்.

இன்றைய கால கட்டத்தில் பரிசளிப்பு விழாவொன்றை நடாத்தி மலரையும் வெளியிடுவது என்பது பொருளாதார ரீதியில் பெரும் சுமையாக இருப்பினும் அதனையும் சமாளித்து பரிசளிப்பு விழாவினையும் மலர் வெளியீட்டினையும் ஏற்பாடு செய்துள்ள அதிபர், ஆசிரியர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்தோடு அண்மைக் காலமாக இப் பாடசாலை பல்வேறு துறைகளிலும் வளர்ச்சி கண்டு வருகிறது. பரீட்சைப் பெறுபேறுகளும் வெகுவாக உயர்ந்து வருகின்றன. எனவே பாடசாலை முன்னேற்றப் பாதையிலே பயணிக்க ஆரம்பித்திருக்கும் இவ் வேளையிலே மென்மேலும் பாடசாலை வளர்ச்சி பெற எனது வாழ்த்துக்கள்.

மேலும் பரிசளிப்பு விழா இனிதே நடைபெற எனது நல்வாழ்த்துக்கள்.

**பி.எஸ்.சதீஸ்**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாண கல்வித் திணைக்களம்
கண்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# SRIYANI

**Dress Point**

**# 559, Peradeniya Road,**

**Kandy.**

**081 - 2220880**

**Kegalle**

**Tel: 035 - 2222374**

**Kurunegala**

**037 - 2233240**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**வாழ்த்துச் செய்தி**

கண்டி வலய தமிழ்மொழி பாடசாலைகளுள் ஒன்றான க/தலாத்து ஓயா தமிழ் மகா வித்தியாலய பரிசளிப்பு விழா மலருக்கு ஆசியுரை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

தலாத்து ஓயா தமிழ் மகா வித்தியாலயம் அண்மைக் காலமாக தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை , க.பொ.த சா/தரப் பரீட்சை, க.பொ.த உ/தரப் பரீட்சை போன்றவற்றில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வருவதுடன் மட்டுமல்லாது இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் திறமை காட்டி வருகின்றமை மகிழ்ச்சிக்குரியதாகும்.

மாணவர்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகளில் பாடசாலை பரிசளிப்பு விழாவும் ஒன்று. சிறிய பாடசாலையானாலும் அதன் செயற்பாடுகள் எமக்கு மிகுந்த பெருமையைத் தருகின்றது. தலாத்து ஓயா தமிழ் மகா வித்தியாலயம் எக் காலத்திலும் கல்வியிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சிறந்து விளங்க வாழ்த்துகின்றேன்.

M.W.**விஜேரத்ன**
வலய கல்விப் பணிப்பாளர்,
கண்டி

මහනුවර කලාපයේ, දෙමළ මාධ්‍ය පාසල් වලින් එකක් වන මහ/තලාතුඔය දෙමළ මහා විද්‍යාලයේ ත්‍යාග ප්‍රදානෝත්සවයේ සමරු තිළිණයට පණිවිඩයක් නිකුත් කිරීමට ලැබීම පිළිබඳව මා අතිශයින් සතුටට පත්වෙමි.
තලාතුඔය දෙමළ මහා විද්‍යාලය මෑතක සිට 5වන ශ්‍රේණියේ ශිෂ්‍යත්ව විභාගය, අ.පො.ස. සාමාන්‍ය පෙළ සහ උසස් පෙළ විභාගවල විශිෂ්ඨ ප්‍රතිඵල ලබා තිබීම මෙන්ම විෂය බාහිර ක්‍රියාකාරකම් වලින්ද විශිෂ්ඨ දක්ෂතා පෙන්වා තිබීම සතුටට කරුණකි.
මෙම ත්‍යාග ප්‍රදානයද පාසල් සිසුවන් දිරිගැන්වීම සඳහා වන එක් අවස්ථාවකි. මෙම පාසල කුඩා වුවත් එහි ක්‍රියාකාරකම් අපට අගය කළ හැකි ආදර්ශමත් ලෙස පවත්වාගෙන යන්නකි.
මෙම පාසල අධ්‍යාපනය හා බාහිර ක්‍රියාකාරකම් තුළින් එම ක්ෂේත්‍රය තුළ බැබළේවායි ප්‍රාර්ථනා කරමි.

මෙයට,
**එම්. ඩබ්. විජේරත්න**
කලාප අධ්‍යාපන අධ්‍යක්ෂ,
මහනුවර.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# BRIGHT ACADEMY

**Quality Education For a Quality Society**

**S. Sham**

## English Medium - Maths

| | |
|---|---|
| Garde 11 | Sat 10.30 - 12.30<br>Sun 8.00 - 10.30 |
| Garde 10 | Sat 1.30 - 3.30 |
| Garde 9 | Mon 3.00 - 5.00 |
| Garde 7&8 | Thur 3.00 - 5.00 |

## தமிழ் மொழி மூலம் கணிதம்

| | |
|---|---|
| Garde 11 | சனி 8.00 - 10.30<br>ஞாயிறு 10.30 - 12.30 |
| Garde 10 | சனி 3.30 - 5.30 |
| Garde 9 | ஞாயிறு 12.30 - 2.30 |
| Garde 7&8 | புதன் 3.00 - 5.00 |

**Very Best Class in Kandy**

## தமிழ் மொழி மூலம் விஞ்ஞானம்

| | |
|---|---|
| Garde 11 | சனி 10.30 - 12.30<br>ஞாயிறு 8.00 - 10.30 |
| Garde 10 | சனி 12.30 . 2.30 |
| Garde 9 | சனி 8.00 - 10.00 |
| Garde 8 | செவ்வாய் 3.00 - 5.00 |

**இ.இந்திரகுமார்**

## தமிழ்

| | |
|---|---|
| Garde 11 | சனி 12.30 - 2.30 |
| Garde 10 | 10.30 . 12.30 |

**நளிர் Sir**

**199, 217, D.S. Senanayake Veediya,**

**Kandy.**

**Tel: 077 - 3424383**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

தலாத்து ஓயா, தமிழ் மகா வித்தியாலயம் 2012ம் ஆண்டு வெளியிடும் "முத்தமிழ் நாதம்" இரண்டாவது இதழுக்கு ஆசியினையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் உளமார மகிழ்கின்றேன்.

அறிவு வெள்ளம் பல்கிப் பெருகும், இன்றைய நாட்களில் புதிய அறிவுத் தனங்களுடனும் எம்மைத் தொடர்புபடுத்திக் கொள்ள, கல்வி அறிவைப் பெறும் முயற்சி வாழ் நாள் முழுவதும் நீடிக்க வேண்டும்.

"தமிழ் செம்மொழி" கலை இலக்கியங்கள் தமிழன் வாழ்வில் நினைவுச் சின்னங்களாக, வாழ்க்கையின் வழிகாட்டிகளாக வாழ்த்தி வணங்கும் தெய்வங்களாக இன்னும் புகழுடன் வாழ்கின்றது.

"தமிழன் என்றொரு இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு" என்ற நாமக்கல் கவிஞனின் கூற்று மெய்ப்பட வேண்டும். நூல்களும், கலைவிழாக்களும் உயிரோட்டம் வழங்க வேண்டும்.

சமகால உணர்வுகளை வெளியிடும் மொழிக்கும், சமகால கலை நிகழ்வுகளுக்குமிடையே உள்ள இணைப்பைப் பாடசாலைகள் வளர்க்க வேண்டும். உள்ளதை சொல் நல்லதை செய், காலம் இருக்கிறது எங்களை நம்பி.

'முத்தமிழ் நாதம் சங்கே முழங்க வேண்டும்' என இம் முயற்சியில் ஈடுபட்ட அனைத்து நல்ல உள்ளங்களையும் பாராட்டுகின்றேன்.

"முத்தமிழ் நாதம்" தமிழ் வளம்பெற புதிய எழிலோடும் ஒளி வீசி இன்பம் நல்க மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

**பழனிமுத்து ஸ்ரீதரன்**
மேலதிக வலயக் கல்விப் பணிப்பாளர்
கண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# Lucky Hardware

**General Hardware Merchants**

**Cement, Metal, Sand, Block, Stone, Asbasto Sheet,**
**PVC Item, Water Tank**

***Terrazzo Chips, Government Suppliers***

**233, William Gopallawa Mw,**
**(New Road) Kandy**

**Tel: 077-9648173, 081-2234198, 081- 4950770**

*With Best Compliments From:*

# SRIDARANS STORES

***Dealers in P.V.C. Sheeting, Polythene,***
***Nylon Rope Etc.,***

**64, Kings Street,**
**Kandy.**

**Tel: 081 - 4949419, 2224132**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தலாத்துஓயா தமிழ் மகா வித்தியாலயத்தின் இரண்டாவது நூல் வெளியீடான "முத்தமிழ் நாதம்" எனும் இம்மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பேரானந்தம் அடைகின்றேன்.

தலாத்துஓயா நகரத்தின் கல்விக் கண்ணாக விளங்கும் எமது நவோதயா பாடசாலை முன்மாதிரிப் பாடசாலைகளில் ஒன்றாக விளங்குகின்றது.

எமது வித்தியாலய முதல்வரின் வழிகாட்டலில் எமது பாடசாலை மாணவர்களின் கல்விச் சாதனைகளையும், திறமைகளையும், வளர்ச்சியினையும், இணைபாடவிதான செயற்பாடுகளின் பங்களிப்பினையும் "முத்தமிழ் நாதம்" சுமந்து வருகின்றது.

இம்மலர் அழகாகவும் மாணவர்களின் ஆசிரியர்களின் ஆக்கங்களினையும் ஆற்றல்களையும் சுமந்து மண்ணின் வரலாற்றுப் பதிவாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

எமது பாடசாலை மாணவர்களின் ஆளுமை வளர்ச்சியினை வளர்க்கும் வகையில் இம்மலரை வெளியிடுவதில் பெருமிதம் அடைகிறேன்.

இவ்விழா சிறப்புற அமைய மனமார வாழ்த்துவதோடு புதுப்பொலிவுடன் "முத்தமிழ் நாதம்" வருடா வருடம் உலா வரட்டும்.

"முயற்சி திருவினையாக்கும்"

**இ. இந்திரகுமார்**
பிரதி அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# Zam Zam Hotel & Grocery

**Main Street,
Talatuoya.**

*With Best Compliments From:*

# New Swiss Paradise



***Dealers in Professional Saloon Accessaries & Cosmetic Items***

Wella, Keune, Aroma Magic, Loreal, Janet,Ferm, Jolem, Jovees Garnier, FA Swiss Formula, Costume Jewellery, Costume Jewellery Paimi, Doctor Qban & Saloon Needs Ect.

***Wholesale & Retail***

**117/A, Peradeniya Road, Kandy.**

**Tel: 081-2237037, 077-3145974
077-9871586**

***New Swiss Paradise***

**# 107, George E.De Silva,
Shopping Complex, Kandy.
Tel: 072 - 2878334**

*With Best Compliments From:*

# CITY MEDICALS

*FOR YOUR DYNAMIC PHARMACEUTICAL SERVICE*

**Retail Drugs, Dispensing Chemist, Grocery, Cosmetics & Baby items**

**No. 2/G/16, Seego Plaza,
Kandy Road,
Thalathuoya**

*With Best Compliments From:*

# Sepali Traders

Philips, Toshiba, Sisil, Singer, Panasonic, LG, Samsung, Sanyo, Polytron, Kenstar, Telesonic, Alpha, Arpico, Damro, Ceyesta, Usha, Xcella, Daytron, Edgro, Efiniti, Lanka Bell, Suntel

**No: 21, Main Street,
Talatuoya.**

**Tel/Fax: 081- 2404751,
Mobile: 071- 4761999**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

எழில்மிகு தலாத்துஓயா நகரினில் அமையப்பெற்று கல்வியிலும் இணைபாடவிதான நடவடிக்கைகளிலும் சிறப்புற்று விளங்கும் க/தலாத்துஓயா தமிழ் மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா 2012ல் வெளியிடப்படுகின்ற முத்தமிழ் நாதம் சஞ்சிகைக்கு வாழ்த்துரைப்பதில் மகிழ்வடைகின்றேன்.

கல்வியிலும் ஏனைய நடவடிக்கைகளிலும் சிறப்புற்று விளங்கும் மாணவச் செல்வங்களது திறமைகளுக்கு அங்கீகாரம் வழங்கி பரிசளிப்பு விழா நடாத்தப்படுகின்றமையும், ஆக்கத் திறமைகளுக்கு களம் அமைக்கும் வகையில் முத்தமிழ் நாதம் சஞ்சிகை வெளியிடப்படுகின்றமையும் பெருமையளிப்பதாக அமைகின்றது.

இன்றைய உலகின் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய பல அனுபங்களை இத்தகைய முயற்சிகள் மாணவர்களுக்கு பெற்றுக் கொடுக்கும் என்பது எனது திடமான நம்பிக்கை.

தலாத்துஓயா தமிழ் மகா வித்தியாலயம் பெற்று வருகின்ற வெற்றிகளுக்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றும் அனைவரையும் வாழ்த்தி இவ் வெற்றிகள் தொடர பிரார்த்திக்கின்றேன்.

N. **லோகநாதன்**
பழைய மாணவர் சங்கத் தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*





# New Vijaya Cafe

**# 199, Colombo Street,**
**Kandy.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர்களின் உள்ளங்களிலிருந்து...

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழின் நாதம் ஓங்கட்டும், எட்டுத் திக்கும் மணம் பரப்பும் தமிழின் மணம் வீசட்டும், க/தலாத்துஓயா தமிழ் மகா வித்தியாலய மாணவ சமூகம் கற்றவர்களின் அடிச்சுவடொற்றி தளரா நடை போடும் இவ்வேளையில் கலை விழா மலரான முத்தமிழ் நாதமானது இரண்டாவது தடவையும் வெளிவருவதை அனைவரும் பாராட்டி வாழ்த்துங்கள். மாணவர்களின் ஆக்கத்திறனையும், கல்வித்திறனையும், கற்பனைத் திறனையும் வெளிக்காட்ட எடுத்த பாரிய முயற்சியே இம் முத்தமிழ் நாத படைப்பாகும்.

இம் முத்தமிழ் நாதமானது கலை மலராக வெளிவருவதற்கு, நாம் விளம்பரங்களைக் கேட்டுச் சென்ற போது மனங்கோணாது விளம்பரங்களைத் தந்து பண உதவிகளைச் செய்த பெருந்தகைகளே முதல் காரணமாகும். இவர்களுக்காக நாம் என்றென்றும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். இத்துடன் இக் கலை மலரினை நெறிப்படுத்த எமக்குப் பொறுப்பளித்த அதிபர், பிரதி அதிபர் அவர்களுக்கும், ஆசிச் செய்தி வழங்கியோருக்கும், ஆக்கங்களை தந்துதவிய ஆசிரிய சகோதர சகோதரிகளுக்கும், அன்புக்குரிய மாணவச் செல்வங்களுக்கும், இம் முத்தமிழ் நாத இதழினை பிழையற வனப்புடன் பதிப்பித்த வினோ அச்சகத்தாருக்கும், எமக்கு பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்து ஊக்குவித்த ஏனையோருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளை நவில்வதோடு, மாணவர்களின் இவ்விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.

**திருமதி. சந்திரகுமாரி அழகுதேவர்**

**திருமதி. புஸ்பவதி ரவிச்சந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


*With Best Compliments From:*


*Express your LOVE with GOLD*

# LATHA Jewellers

*Sovereign Gold Jewellers*

**No.27,
KOTUGODELLA VEEDIYA,
KANDY.**






**Tel: 081 2232027**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலை அதிபர்

**திரு. V. தங்கவேல்** B.Ed., S.L.P.S. 2-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க/தலாத்துஓயா தமிழ் மகா வித்தியாலயம்

## பரிசளிப்பு விழா – 2012

**இடம்: வித்தியாலய பிரதான மண்டபம்**

**காலம்: 01-11-2012, வியாழக்கிழமை பி.ப 1.00 மணி**

*பிரதம அதிதி*

**ஸ்ரீ A. நடராஜன்** (இந்திய உதவி தூதுவர்)

*கௌரவ அதிதிகள்*

**திரு. P. சதீஸ் -** (மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் - மத்திய மாகாணம்)

**திரு. M.W. விஜேரட்ண -** (வலய கல்விப் பணிப்பாளர் - கண்டி)

*சிறப்பு அதிதிகள்*

**திரு. P. ஸ்ரீதரன் -** (மேலதிக வலய கல்விப் பணிப்பாளர் - கண்டி)

**திரு. N. லோகநாதன் -** (பழைய மாணவர் சங்க தலைவர்)

*நிகழ்ச்சி நிரல்*

அதிதிகளை வரவேற்றல்

மங்கள விளக்கேற்றல்

பாடசாலை கீதம்

**வரவேற்பு நடனம்**

வரவேற்புரையும், தலைமை உரையும் (அதிபர்)

**விநாயகர் ஸ்துதி**

முன்னால் அதிபர்களை கௌரவித்தல்

**ஸ்காப் நடனம்**

வித்தியாலய ஆசிரியர்களை கௌரவித்தல்

அதிதி உரை

மேற்கத்திய நடனம்

**பரிசளிப்பு**

அதிதி உரை

நூல் வெளியீடும், பரிசளிப்பு வைபவமும்

நினைவுச் சின்னம் வழங்கல் (அதிபர்)

பிரதம அதிதி உரை

நன்றி உரை

தேசிய கீதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# OSHO OFFSET

**KANDY.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடா முயற்சி வெற்றி தரும்

ஓர் அடர்ந்த காட்டில் ஒரு முயல் தன் நண்பர்களோடு சுற்றித் திரிந்தது. அப்போது அங்கே ஒரு குகை அதன் கண்ணில்பட்டது. உடனே அந்தக் குகைக்கு போக அந்த முயல் ஆசைப்பட்டது. தன் ஆசையைத் தன் நண்பர்களுக்கு கூறியது, அதைக் கேட்ட நண்பர்கள் அந்த குகைக்குப் போக வேண்டாம் எனக் கூறின.

அந்த முயலோ தன் நண்பர்கள் கூறியதைப் பொருட்படுத்தாமல் அந்தக் குகையை நோக்கி நடந்தது. மற்ற முயல்கள் எல்லாம் அந்த முயலைப் பார்த்து. "நாம் கூறியதைக் கேட்காமல் செல்கின்றாய்தானே சென்று பார்த்தால் தான் புரியும்" என்று கூறி விட்டு அவை சென்று விட்டன.

குகையை நோக்கிச் சென்ற அந்த குட்டி முயல் குகையின் உள்ளே காலை எடுத்து வைத்தது. உடனே ஏதோ ஒரு மிருகத்தின் சத்தம் கேட்டது. அந்த முயல் பயந்து போய் உள்ளே எட்டிப்பார்த்தது. உடனே ஓட்டம் பிடித்தது. சிங்கம் அதன் பின்னால் ஓடியது, சிங்கம் வந்த வேகத்தில் கிணற்றில் விழுந்து விட்டது. முயல் தப்பித்தேன் என்று, போய் அதன் நண்பர்களோடு சந்தோஷமாய் இருந்தது. தன் நண்பர்கள் கூறியதைக் கேட்டிருந்தால் இந்தப் பிரச்சினை இல்லை, இருந்தாலும் பரவாயில்லை என் முயற்சியால் வெற்றி பெற்றேன் என்று சந்தோஷப்பட்டது.

N. தயாளனி - தரம் - 4

## அம்மா

*அம்மா எங்கள் அம்மா*
*அன்பு உள்ள அம்மா*
*பாலும் சோறும் ஊட்டும்*
*பாசம் உள்ள அம்மா*
*கொஞ்சிக் கொஞ்சிப்பேசும்*
*குணமும் உள்ள அம்மா*
*பள்ளிக்கு அனுப்பி வைக்கும்*
*பண்பு கொண்ட அம்மா*
*சின்ன நோய் வந்தாலும்*
*துடித்துப் போகும் அம்மா*
*கண்ணை இமை காப்பது போல*
*எம்மைக் காக்கும் அம்மா*

C. யுவன்ஸ்ரீ - தரம் - 2




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# ARADHANAS

SOVEREIGN GOLD JEWELLERS



PURE

RARE


ETERNAL



**# 103, Colombo Street,**
**Kandy. 20000**

**Tel: 081 - 2234020**

*With Best Compliments From:*





# *New Deepa Jewellers*

***22Kt Sovereign Gold Jewellery***



**# 35A, Yatinuwara Veediya,**
**Kandy.**

**Tel: 081 - 2232532**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூழல் மாசடைதல்

இன்று சூழலை நேசிப்போம், வளப்படுத்துவோம் என்று அறைகூவிக்கொண்டு சூழலை மாசுப்படுத்துதலையே அநேகமானோர் செய்கின்றனர். சூழலானது இறைவனால் படைக்கப்பட்ட சகல பௌதீக அம்சங்களும் உள்ளடக்கியதாகும். அத்துடன் இச்சூழலானது இயற்கை வளம் பொருந்திய அழகு நிறைந்த ஒன்றாகும். இதனை நாம் பேணிக்காப்பது முக்கியமான அம்சமாகும். இயற்கை அழகு மிகுந்த சூழலை சுத்தமானதாகவும், மாசுப்படுத்தாத வகையிலும் பாதுகாக்க வேண்டியது மக்கள் அனைவரினதும் கடமையாகும்.

இன்று உலகில் வாழும் மனிதர்களால் சூழல் பலதரப்பட்ட வகையில் மாசடைகின்றது. இதனால் பல்வேறு விதமான பிரச்சினைகள் தோன்றி, மனித வாழ்வு பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றது. இதனால் சூழலை மாசடையாமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும். மனிதன் சூழலை மாசடைய செய்வதன் காரணமாக இப்பூவுலகில் வாழ்கின்ற சகல உயிரினங்களும் பல்வேறுபட்ட அபாயங்களுக்கு உள்ளாகின்றன. இயற்கையின் இயல்பான நிலை பாதிக்கப்படுகின்றது. உலக நாடுகளின் அபிவிருத்தியில் கைத்தொழில் முயற்சிகள் பெரும் பங்காற்றுகின்றது. அவ்வகையில் தொழிற்சாலைகள் முக்கிய இடம் வகிக்கின்றது.

இத் தொழிற்சாலையில் இருந்து வெளிவிடப்படும் புகை மற்றும் நச்சுத்தன்மை புகை என்பவற்றினால் மனிதனதும் உயிரினங்களினதும் சுவாச செயற்பாட்டிற்கு நச்சுத்தன்மையான வாயு தடையாக காணப்படுவதோடு சூழலும் மாசடைகின்றது. அது மட்டுமில்லாமல் தொழிற்சாலையில் இருந்து அகற்றப்படும் கழிவுகளை நீரோடைகளில் அல்லது ஆறுகளில் கொட்டுவதன் காரணமாக நீர் நிலைகள் பாதிக்கப்படுகின்றன. இதனால் அச்சூழலில் வாழும் மக்கள் உட்பட்ட சகல உயிரினங்களும் நோய்களுக்கு உள்ளாகி இறக்கின்றன. இவ்வாறான ஒரு செயலிற்காக நாம் தீர்வுகளை காணவேண்டும். அத்தீர்வானது தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் புகையினை ஒழுங்கான முறையில் வெளியேற்றல், தொழிற்சாலை கழிவுகளை நீருடன் கலத்தலை தடுக்கும் வழிமுறைகளை கையாள வேண்டும்.

சூழலை மாசுபடுத்தும் அடுத்த சந்தர்ப்பமாக இயற்கை அனர்த்தங்களை எடுத்துக் காட்டலாம். அவ்வகையில் இச்சூழலை சீற்றமாக்கும் இயற்கை அனர்த்தங்களானது, மனிதனின் செயற்பாடுகளின் விளைவாகவே தோன்றுகின்றது. இவ் அனர்த்தங்கள் பல்வேறு வடிவங்களைக் கொண்டு சீற்றங்கொள்கின்றன. பூகம்பம், காட்டுத்தீ, இடி மின்னல் தாக்கங்கள், வறட்சி, வெள்ளப்பெருக்கு, கடற்கோள், மண்சரிவு, எரிமலைச் செயற்பாடு போன்ற வடிவங்களாகும். சூழலை மனிதன் பேராசையின் காரணமாகவும், சுயநலத்தின் காரணமாகவும், சமூகத்திடையே காணப்படும் போட்டியின் காரணமாகவும், திடீரென முன்னேற வேண்டும் எனும் அவாவின் காரணமாகவும் சூழலை அபரிமிதமாக பயன்படுத்துகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வகையில் ஆறுகளில் மணல் அகழ்தல், சுரங்கத் தொழில்களில் ஈடுபடல், மாணிக்கக்கல் அகழ்தல் போன்றவற்றினால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு சூழலை மாசடையச் செய்கின்றது. இதனால் அப் பிரதேசங்களில் வாழும் மக்கள், பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். இதனால் மனிதன் தன் உழைப்பால் காலம் பூராகவும் சேகரித்து வைத்திருந்த சொத்துக்களை இழக்கின்றான். அது மட்டுமில்லாமல் நோய்களுக்கு உள்ளாவதோடு அகதிகளாகும் நிலைமைக்கு உட்படுகின்றான். இதனால் காலம் காலமாக வரும் பருவப்பெயர்ச்சி மழையின் காரணமாக மனிதன் இதனை பெரும் சவாலாக எதிர்நோக்குகின்றான். இதற்கான தீர்வு யாதெனின் முறையான சட்டத்திட்டங்களை கையாளல் ஆகும்.

அடுத்ததாக எரிமலைச் செயற்பாடானது மனிதனை துயரத்திற்கு இட்டுச் செல்லும் ஒரு காரணியாகும். இவ் எரிமலைச் செயற்பாடானது புவித்தகடுகளின் ஒடுங்குதல், விலகல், அமிழ்தல் காரணமாக புவியின் உட்பகுதியிலுள்ள பாறைக் குழம்பானது வேகமாக பாயும் போது எரிமலை வெடிப்பு உண்டாகின்றது. இதனால் வெளிவிடப்படும் நச்சுத்தன்மை மிகுந்த வாயுவினால் சூழல் மாசடைவதோடு இவ்வாறு வெளிவிடப்படுவதனால் அமில மழை உருவாகி பயிர்ச்செய்கை நிலங்களுக்கு இம்மழை நீர் செல்வதனால் பயிர்கள் நஞ்சாக மாறும் வாய்ப்புகள் அதிகம். இதனால் மனிதன் உணவுப் பற்றாக்குறை உண்டாகும் நிலைமைக்கு உள்ளாகுவான். இவ் அமில மழை ஆறுகளில் கலப்பதால் உயிரினங்கள் இந்நீரை பருகி இறக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும். இதனால் சமூக பொருளாதாரத்தில் தாக்கங்கள் ஏற்படும்.

மற்றுமொரு செயலாக யுத்த நடவடிக்கையினால் மக்களுக்கு நிம்மதியற்ற வாழ்க்கை நிலை காணப்படுவதோடு மனிதன் மரணத்தை தழுவக்கூடிய நிலைமையும் அதிகமாகக் காணப்படும். இந்த கொடூரமான யுத்தத்தினால் மனிதனுக்கு வாழ்விடங்கள் இல்லாமல் அகதிகளாக காணப்படும் நிலை அதிகரித்துக் கொண்டு செல்லும். சூழலுக்கு ஏற்படும் தீங்கானது வெடிகுண்டுகளின் புகையும், வெடிகுண்டுகளின் சிதறல் சூழலை மாசுபடுத்துவதோடு கட்டிடங்களின் இடிபாடுகளுடன் சூழல் சமநிலை அற்றுக் காணப்படும். இச் செயலிற்கு மாறாக நாம் எடுக்கும் தீர்வானது பொருத்தமான ஆட்சி முறையையும் சட்டதிட்டங்களையும் நடைமுறைபடுத்தல் வேண்டும், இதனால் நாடும் சூழலும் சமநிலைத் தன்மையோடு காணப்படும்.

சூழலை மாசுபடுத்தும் மற்றொரு காரணியாகிய காடழிப்பினை எடுத்துக் கொண்டால் நகர்மயமாக்கப்படுவதற்கே இவ்வாறான ஒரு செயல் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றது. இக் காடழிப்பினால் புவி பிளவுபட்டு நிலத்தடி நீர் ஆவியாகி செல்வதன் காரணமாக உயிரினங்கள் அழிவுக்கு உள்ளாகின்றன. ஏனெனில் சூழலின் வெப்பம் அதிகரிப்பதாலும் நீர் பற்றாக்குறையினாலும் உயிரினங்கள், தாவரங்கள் அற்றுப்போவதோடு மட்டுமன்றி வன விலங்குகள் நகர்ப்புறங்களுக்குள் புகுந்து நாசம் விளைவிக்கின்றன. மற்றும் காடழிப்பினால் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதோடு பெருந்தெருக்களையும் மக்கள் வசதிக்காக அமைத்துக் கொள்கின்றான். காடழிப்பினால் ஏற்படும் விளைவானது மரங்கள் அழிக்கப்படுவதால் O2 வாயு குறைவடைந்து Co2 வாயுவின் செறிவு அதிகப்படும். இதனால் நீர் பற்றாக்குறை ஏற்படும், வறட்சி ஏற்படும், சூழலுக்கு தேவையான மழை வீழ்ச்சி கிடைக்காது. இதனோடு நகர் மயமாக்கப்பட்டு சேரிப்புறங்கள் அதிகரிப்பதால், சனத் தொகை அதிகரிப்பு ஏற்படும். இதனால் சேரிப்புறங்களில் பொலித்தீன் பாவனை, பிளாஸ்டிக் பொருட்களின் பாவனை, மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குவரத்து வசதிகளின் அதிகரிப்பும், நிறைந்து வழியும் அழுக்குகளினாலும், சூழலினை மாசுபடுத்தும் நிகழ்வு ஏற்படும். அத்தோடு தொற்று நோய்களும் அதிகளவுக்கு பரவும் அபாயம் உண்டு. இதற்கான பரிகாரமாக நாம் மரங்களை வெட்டினால் அதற்கு பதிலாக மரங்களை நடுதல், பிளாஸ்டிக் கழிவுகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்தல் போன்ற செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

சூழலை மாசுபடுத்தும் மற்றும் ஒரு காரணியாக அணுகுண்டு பரிசோதனையையும் குறிப்பிடலாம் இச்செயலானது. உலகின் விஞ்ஞானத்துறையும், தொழினுட்பத்தின் வளர்ச்சியின் காரணமாகவும் நடைபெறுகின்றது. இதன் பாதிப்பாக சுனாமி, பூகம்பம் போன்ற பாரிய அளவிலான அனர்த்தங்கள் நிகழுவதோடு சூழலின் இயற்கை சமனிலை அற்றுப்போகும். இதனால் உயிரினம் இறக்கப்படும், நாட்டின் எல்லைகள், கட்டிடங்கள், ஏனைய சொத்துக்களும் அழிவடையும் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கான தீர்வானது அணுகுண்டு பரிசோதனையை சூழலுக்கு தீங்கு விளைவிக்காத வகையில் ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

விண்வெளிப் பயணமானது மக்களுக்கு பிரயோசனமாக இருந்து நன்மையையும் தருவதோடு தீமையான செயல்களும் பல நடைபெறுகின்றன. விண்வெளிக்கு அனுப்பப்படும் விண்வெளிக் கப்பலானது சூழலுக்கு தீங்குவிளைவிக்கும் பல செயல்களை செய்கின்றன என்றால் மிகையாகாது. இவ் விண்வெளி கப்பலானது செல்லும் வழியில் ஆபத்துக்குள்ளாகி வெடித்து சிதறும் சந்தர்ப்பங்களில் இக்கப்பலின் பாகங்கள் ஒவ்வொரு இடத்திற்குச் செல்லும் போதும் அவற்றிலிருந்து வெளியேறும் நச்சுவாயுக்களினாலும் விண்வெளி சூழல் மாசடைவதோடு நாம் வாழும் புவியும் மாசுபடுத்தலுக்கு உள்ளாக்கப்படுகின்றது. அத்தோடு சூழலை மாசுபடுத்தும் ஒலியை எடுத்துக் காட்டலாம். வாகனங்களின் ஒலியினால் ஒருவர் மற்றவரிடம் பேசும் போது வாகனங்களின் ஒலி தடையாக காணப்படுகின்றது. அதனோடு தேர்தல், திருவிழாக்களின் போதும் ஒலிபெருக்கியில் ஏற்படும் ஒலியினால் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பாரிய பிரச்சினை ஏற்படும். வாகனங்களை செலுத்தும் போது தொலை பேசியில் உரையாடிக் கொண்டு சென்றால் விபத்துக்குள்ளாகும் சந்தர்ப்பம் அதிகம். அடுத்ததாக மின்னுபகரணங்களானது அதிர்வினால் சூழலை மாசடைய செய்கின்றது. குளிர்சாதனப் பெட்டியிலிருந்து வெளிவிடப்படும் CFC வாயுவானது ஓசோன் படையை சிதைவுறச்செய்கின்றது. இதற்கான தீர்வாக குளிர்சாதனப் பெட்டிகளை பாவனையிலிருந்து குறைத்தல், மின்னுபகரணங்களை குறைத்தல், வாகன ஒலிகளை குறைத்தல் போன்ற செயற்பாடுகளில் அக்கறை கொள்ள வேண்டும்.

எனவே மேலே குறிப்பிட்ட சூழலைமாசடையச் செய்யும் காரணிகளுக்கு மனிதனே முதன்மை காரணியாவான். சூழலை மாசடையாது செய்யக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொண்டு எமக்குரிய சூழலை பாதுகாத்து எமது வருங்கால இளஞ்சந்ததியினருக்கு வழங்குமாறு வேண்டிக் கொள்கிறேன்!.

சூழலை பாதுகாப்பது எமது தலையாய கடமையாகும்!

**ஆர். சிந்துஜா**
தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பியாஜேயின் பிள்ளை வளர்ச்சி பருவத்தில் இசை

இசை வளர்ச்சி யுகம் என்று குருகுலமாய் காட்டில் முனிவர்கள் வாழ்ந்த காலத்தை குறிப்பிடுவது சாலப் பொருந்தும். அதாவது முனிவர்கள் காட்டின் நடுவில் தமது வீடுகளை அமைத்து வாழ்ந்து வந்ததால் மாணவர்களுக்கு காட்டிலேயே இசையை கற்பிக்கக் கூடிய ஒரு சூழ் நிலை ஏற்பட்டது. மாணவர்களும் தாம் கற்க வேண்டிய கலையை முழுமையாக கற்கும் வரை காட்டிலேயே அமைதியான சூழலில் இருந்து கற்றுக் கொள்வர். மாணவர்கள் மணப்பருவம் அடைந்ததும் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படுவார்கள். பெற்றோரும் தம் குருவுக்கு தட்சணை செலுத்தியதன் பின்னர் தம் பிள்ளைகளை அழைத்துச் செல்வர். இவ்வாறு காட்டில் இசை பயின்ற மாணவர்கள் அடுத்ததாய் குடும்பமாய் கிராமத்தில் வசிக்கும் குருவிடம் கற்றுக் கொள்வர். இங்கு மாணவர்கள் குருவிற்கு பணிவிடைகளை செய்து ஏனைய நேரங்களில் இசையை கற்றுக் கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது.

முதல் இரு காலங்களிலும் மாணவர்களுக்கு இசையைக் கற்றுக் கொள்ளக்கூடியதொரு நல்ல வாய்ப்பு கிடைத்தது எனினும் இன்று உலகமானது நாளுக்கு நாள் நவீனமயப்படுத்தப்பட்டுக் கொண்டு இருக்கின்றது. இங்கு கல்வியானது பாடசாலை மயமாக்கப்பட்டதன் நிமித்தம் இசையும் பாடசாலையில் ஒரு பாடமாக இணைக்கப்பட்டுள்ளது. மெய்ஞானம் மறந்து விஞ்ஞானமே வாழ்வான இவ் யுகத்தில் மனித வாழ்வோடு ஒன்றுக்கொன்று பின்னிப்பிணைந்துள்ள இசையினை முழுமையாக கற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு வந்துள்ளமை வரவேற்கத் தக்கதும் வாழ்த்துரைக்க கூடியதுமான ஒன்றாகும்.

மனிதனிடம் தாலாட்டில் தன்னை அறிமுகம் செய்து ஒப்பாரியில் ஓய்வு கொள்ளும் இசையானது மாணவப் பருவத்தில் தன்னை அடையாளப்படுத்தும் முறையினை உளவியலாளரான பியாஜேயின் பிள்ளை வளர்ச்சிப் பருவத்தில் இருந்து நோக்குவோம்.

பிள்ளையின் எண்ணக் கருவாக்கம் பல படிகளில் இடம்பெறுகிறது என்பது இவரின் கருத்து. பிள்ளை வளர்ச்சியானது நான்கு படிகளில் இடம் பெறுகின்றது என்ற இவரது கருத்தில் முதற்படி புலனியக்கப் பருவமாகும். இப் பருவம் குழந்தை பிறந்தது முதல் இரண்டு வயதிற்கு இடைப்பட்ட காலமாகும். இயற்கையாக உணரும் திறனைப் பெற்றுள்ள இப்பருவ குழந்தைகள் சூழலில் கேட்கும் ஒலிகளுக்கும், இசைக்கும் மட்டும் இசைவாக்கம் பெற்றுள்ளனர் என்பது இவரின் வாதமாகும். இதன் நிமித்தமே தாலாட்டிற்கு தலை சாய்க்கிறது பிள்ளை என்கிறார். அடுத்ததாக தூய சிந்தனைப் பருவம் என்று 3-5 வயது பிள்ளைகளை குறிப்பிடும் இவர் பாடசாலையின் ஆரம்பப் பருவத்தில் இப்பிள்ளை இசையுடன் அசைவையும் கற்க விரும்புவர், அதாவது தரம் 1,2,3 களில் கற்கும் இப் பிள்ளைகள் இயற்கையாக பாடுதல், பாவனை செய்தல், ஆடுதல், நடித்தல் போன்ற செயல்களுக்கு கட்டுப்பட்டவர்களாவர் என்ற உண்மை இவரது கருத்தாகும்.

மூன்றாம் நிலை தூயசிந்தனைப் பருவம் என்கிறார் அறிஞர். இதனில் 7-10 வயதிற்குட்பட்டவர்களை உள்ளடக்கும். உளவியலாளர் இப்பருவத்தில் இசை ஆர்வத்தை தூண்டும் வகையிலான தமது இயற்கையான இசை ஆற்றலை முன்வைக்க வாய்ப்பளித்தல் அவசியம் என்றும் சுய ஆற்றலை விருத்தி செய்வதோடு இசையின் இலகு தன்மையை போதிப்பதும் பொருந்தும் என்றும் அறைகூவல் விடுக்கின்றார்.

அடுத்ததும் இறுதியுமான சிந்தனைப்பருவமாக சுட்டிக்காட்டுவது நியம சிந்தனைப்பருவமாகும். இப்பருவம் 12-15 வயது வரை என அடையாளப்படுத்திய அவர் இயற்கையாகவே பிரித்தறிதல், இனங்காணல் போன்ற பண்புகளை பிள்ளை பெற்றிருக்கும் என்று வாதிடுகின்றார். அதாவது தரம் 8ற்கு மேற்பட்ட வகுப்பையுடைய இப்பருவ மாணவர்களுக்கு முறையான சாஸ்திரீய இசை போதிப்பதன் அவசியத்தை உணர்கின்றார். அதாவது இப்பருவ மாணவர்களுக்கு முழுமையான அறிமுறையுடன் கீதம், கீர்த்தனை, பதம், வர்ணம் போன்றவற்றை மூன்று காலங்களிலும் கற்பிப்பதன் மூலம் மாணவர்கள் செயன்முறை மற்றும் அறிமுறையில் திறன்பட விளங்குவர் என்பது அவரின் கருத்தாகும்.

**எஸ்.சசிகுமார்**
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ்து பிறப்பே உண்மைக் கிறிஸ்மஸ் பெருவிழா

வரலாற்றில் மெசியாவின் வரவைக் காலாகாலமாகக் காணக்காத்திருந்தார்கள் மக்கள், உலகை மீட்க இவ்வுலகில் வந்து மானிட உருவில் பிறந்தார் உலக மீட்பர், இயேசுக் கிறிஸ்து, "காலம் நிறை வேறிய போது திருச்சட்டத்திற்கு உட்பட்டிருந்த நம்மை மீட்டு, தம் பிள்ளைகளாக ஆக்குமாறு "கடவுள்" தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராகவும், திருச்சட்டத்திற்கு உட்பட்டவராகவும் அனுப்பினார்.

அவ்வாறான மீட்பராம் கிறிஸ்துவின் பிறப்பை உலகெங்கும் கொண்டாடி மகிழுமாறு "கொன்சன்ரைன்" மன்னன் கிறிஸ்மஸ் விழாவை அறிமுகம் செய்து வைத்துள்ளான். மார்கழி ஆரம்பமானதுமே விளம்பரங்கள், மின்னொளி அலங்காரங்கள், நகரங்கள், பட்டினங்கள், வர்த்தக நிலையங்கள், வீடுகள், வீதிகள் யாவுமே அலங்கார கண்கவர் சோடனைகளினால் களைகட்டி விடும் என்று சொல்லலாம். அன்று கொண்டாடப்படும் இவ்வாறான கிறிஸ்து பிறப்புக் கொண்டாட்டம் பொருள் பொதிந்ததுதானா? கிறிஸ்துவின் பிறப்பு நமது வாழ்விலும் பொருள் தருகின்றதா? கிறிஸ்து இவ்வுலகிற்கு கொண்டு வந்த அன்பு, அமைதி, மகிழ்ச்சி, சமத்துவம், உறவு, பகிர்வு நம்மிடையே கொண்டாடப்படுகிறதா? என்று உற்று நோக்கி, கிறிஸ்துவின் பிறப்பின் மகிழ்வு, நம்மில் வெளிப்படவும், வாழப்படவும், ஆயத்தம் செய்து நமது உள்ளத்தில் கிறிஸ்துவின் விழுமியங்களை வளர்த்து, கிறிஸ்துவின் பிறப்பின் மகிழ்வினை நாம் இன்னும் பங்கெடுத்து கொண்டாடுகின்றோம் என்றால் அது மிகையாகாது. அதுதான் உண்மையானதும், உன்னதமானதுமான கிறிஸ்மஸ் மகிழ்ச்சியாகும்.

கிறிஸ்து பிறப்பு நிகழ்ச்சியானது நமக்கு எல்லாம் பெரு மகிழ்ச்சியே ஆகும். குழந்தைகளைப் போல எளிய உள்ளத்தோடு குழந்தை இயேசுவைக் காணச் சென்ற இடையர்களின் மனநிலை நம்மிடம் வெளிப்படும் போதுதான் கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சியில் நாமும் பங்கு பெறுகின்றோம் என உணர்கின்றோம்.

இயேசுவின் பிறப்பு நிகழ்ச்சியானது பலருக்கு மீட்பைக் கொடுத்தது. மனித விடுதலையை இவ்வுலகிற்கு வெளிப்படுத்தியது. இயேசு தனது பிறப்பினால் கிறிஸ்மஸ் என்ற நன்னாளை உலக மகிழ்ச்சி நிறை நாளாக ஆக்கித்தந்தார். ஆதி மனிதன் வழி வந்த பாவமும், துன்பமும் அகல இயேசுவின் பிறப்பு காரணமாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு தனது தெய்வீக அன்பைப் பகிர்ந்து கொள்வதற்கும் தந்தை கடவுளின் அன்பைத் தாங்கிக் கொண்டு இவ்வுலக மனிதர்களாகிய நம்மிடையே சார்ந்த அன்பை பகிர்ந்து கொள்ளவும், பெத்தலகேம் மாட்டுத் தொழுவத்தில் ஏழையின் வடிவில் வந்து அவதரித்தார், இயேசு.

இந்த விடுதலைச் செய்தியே கிறிஸ்மஸ் மகிழ்ச்சி செய்தியாகும். பார்வையற்றோர் பார்வை பெற, செவிடர் கேட்க, ஊமைகள் பேச, ஆன்மாவை தூய்மையில் பேண, இயேசுவின் அன்புதான் புது வாழ்வில் நிறைவு. இவ்வாறான புதுவாழ்வை கொண்டு வந்த கிறிஸ்துவின் பிறப்பு நமக்கு மகிழ்ச்சியாகும்.

இன்று நாம் வாழும் உலகில், எல்லா நாடுகளிலும் போர், பகை, வறுமை, கொள்ளை, நோய், இயற்கை அழிவு, மனித மரண அவலங்கள், உச்சநிலையை அடைந்துள்ளது. மனித வாழ்வு கசந்த நிலையில் விரக்தியின் விளிம்புக்கு மக்கள் தள்ளப்பட்டு, வாழ்வில் பிடிப்பற்று, நம்பிக்கை இழந்து வாழ்வா, சாவா, எனத் தடுமாறும் நிலையில், வாழ்வில் அடித்துச் செல்லப்பட்டிருக்கும் போது "அஞ்சாதீர்கள்" இதோ எல்லா மக்களுக்கும், பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றோம். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் பிறந்துள்ளார என்று கூறியதும் இவர்கள் அடைந்த மகிழ்ச்சி எல்லையற்றது. கிறிஸ்மஸ் கீதங்கள் பாடி கிறிஸ்துவின் பிறப்பின் மகிழ்வைக் கொண்டாடுவோம்.

**D. சசிகலா**
தரம் 13 (கலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப் பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர் குழாம்

1. திரு V. தங்கவேல் (அதிபர்),
2. திரு E. இந்திரகுமார் (பிரதி அதிபர்)
3. திருமதி A. சந்திரகுமாரி
4. திருமதி K. கலைவாணி
5. திருமதி B. இராமச்சந்திரன்
6. திருமதி S. பஞ்சகல்யாணி
7. திருமதி C.D. சாமுவேல்
8. திருமதி S. இராதை
9. திருமதி N. தில்லைநாயகி
10. திரு S. செல்வகதிர்காமர்
11. திருமதி E.G. சவரியப்பர்
12. திருமதி S.J.T. டிலக்ஷனி
13. திருமதி C. கௌசல்யா
14. திருமதி P. இரவிச்சந்திரன்
15. செல்வி S. கோமதி
16. திருமதி K. சாந்தி
17. திருமதி V. செல்வமலர்
18. திரு S. சசிகுமார்
19. திருமதி V.M. மேனகா
20. திருமதி S. கோமதி
21. திருமதி S. சிவகுமாரி
22. திருமதி M. டல்சிபிரிடா
23. திருமதி. M. கௌரி பிரியதர்ஷனி
24. திருமதி. கிஷானி பெர்ணான்டோ (தொண்டர் ஆசிரியர்)

கல்வி சாரா ஊழியர்

திருமதி. W.G. வயலட் (சிற்றூழியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***With Best Compliments From:***

# SHA Bag INDUSTRIES

Manufactures of All Varity of Bags







**23, New Town, Digana,**
**Rajawella, Kandy.**

**Hotline: 0777-813 037, 0814-987 061**

**E-mail: shabagsb@gmail.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை ஆசிரியர் குழு



**அமர்ந்திருப்போர் : (இ-வ.)** திருமதி S. பஞ்சகல்யாணி, திருமதி S. மலர்சாந்தி, திரு S. செல்வகதிர்காமர், திரு E. இந்திரகுமார் ( பிரதி அதிபர்), **திரு V. தங்கவேல் (அதிபர்)**, திருமதி B. இராமச்சந்திரன், திருமதி A. சந்திரகுமாரி, திருமதி K. இரவீந்திரன், திருமதி K. கலைவாணி

**நிற்போர் : (இ-வ.)** திருமதி S. இராதை, திருமதி. கிஷானி பெர்ணான்டோ, திரு S. சசிகுமார், திருமதி E.G. சவரியப்பர், திருமதி N. தில்லைநாயகி, திருமதி K. சாந்தி, திருமதி V. செல்வமலர், செல்வி S. கோமதி, திருமதி V.M. மேனகா, திருமதி S. சிவகுமாரி, திருமதி S.J.T. டிலக்ஷனி, திருமதி S. கோமதி, திருமதி P. இரவிச்சந்திரன், திருமதி C.D. சாமுவேல், திருமதி C. கௌசல்யா, திருமதி M. டல்சிபிரிடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# CITY TEX

Wholesale & Retail Dealers in
Textiles & Tailoring Items

**# 56,**
**Kotugodella Veediya,**
**Kandy.**

**Tel: 081 2238833, 2223323**
**Fax: 081 2200866**

*With Best Compliments From:*

# HOUSE OF CURTAIN

*For excellent vertical blinds, Curtaining and upholstery materials with tailoring & complete service*

**No. 87, D.S Senanayake Veediya,**
**Kandy.**

Tel: 081-2223490, 2205774




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# VIGNESWARAN STORES

தரமான தேங்காய் எண்ணெயை மொத்தமாகவும்,
சில்லறையாகவும், பெற்றுக்கொள்ளக் கூடிய இடம்



**# 173, Colombo Street,**
**Kandy.**



**Tel: 081 - 2223014**


---


*With Best Compliments From:*

# STAR ELECTRICALS

**Wholesale & Retail Dealers in Electrical Goods,**
**Lamp Shades, Government Suppliers & Contractors**







**# 60, Kotugodella Veediya,**
**Kandy**

**Tel : 081-2223659** **Fax : 081-2238377**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# MAYURA TEX

WHOLESALE & RETAIL DEALERS IN TEXTILE CURTAINING
UPHOLSTERY & INTERIOR DECOR

**35/3, Yatinuwara Veediya, Kandy.**

**Tel: 081 - 3995563, 077 - 1614043**

# MONARA TEX

**35, Yatinuwara Veediya, Kandy.**

*With Best Compliments From:*

## THE INTERNATIONAL HARDWARES

**60, D.S.Senanayake Veediya, Kandy.**

*With Best Compliments From:*



## SHANTHY TAILORS

**313, Peradeniya Rd, Kandy.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# Sri Lanka Pharmacy (Pvt) Ltd.

***Established in 1947***

***Distributor For Leading Pharmaceuticals Companies, Representing Reputed Multinational Research Based Manufactures***

***Distributor For :-***

- *Glaxo Smithkline*
- *Hemas Pharmaceuticals (Pvt) Ltd.*
- *State Pharmaceuticals Corporation of Sri Lanka*
- *State Pharmaceuticals Manufacturing Corporation*
- *J.L. Morison Son & Jones (Ceylon) Ltd.*
- *CIC Holdings PLC*
- *Mega Pharma (Pvt) Ltd*
- *A. Baur & Co Ltd. HC*
- *Pettah Pharmacy (Private) Ltd.*
- *Emerchemie NB (Ceylon) Ltd.*
- *Emar Pharma (Pvt) Ltd.*
- *Sanofi - Aventis Lanka Ltd.*
- *Unical (Ceylon) Limited*

***65 Years of Service to the Nation***

**# 39, D.S.SENANAYAKE VEEDIYA, KANDY.**

**Tel: 081 - 2223606** **Fax: 081 - 2232649**

**E-Mail: slplretail@yahoo.com**

***Distribution Centre:***

**# 109, Katugastota Road, Kandy.**

**Tel: 081 - 2223226 / 2224764** **E-Mail: slpl@sltnet.lk**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MAHATMA GANDHI

Mahatma Gandhi is the father of our Nation. His real name was Mohandas Karamchand Gandhi. He was born 2nd October 1869 at Porbander in Gujarat. His Father, Karamchand Gandhi was Dewan of Rajkot, a small state in Gujarat. His mother was a very pious lady, She used to tell him stories from the Ramayana.

In child hood Gandhiji saw a drama 'Satya Harischandra.' The king Harischandra was a great lover of truth. He gave up his throne and all his wealth for the sake of truth. After seeing this drama Gandhiji make up his mind never to tell a lie.

As a school boy he never copied anything from other children. One day an inspector came to school. He gave the class a sum in Arithmetic. Mohan Das got a wrong answer. His Arithmetic teacher saw it and hinted to him to copy the correct answer.

After the inspector had gone away the teacher asked Mohan Das "why did not you correct the answer?" He replied, "Sir I never copy anything from any body my mother will beat me" The teacher patted Mohan Das on the back.

When Mohan Das was a young boy, his cousin came to stay with him. The two boys together planned to smoke like their big cousin. For this Mohan Das took some copper coins from his father's purse. In the night, Gandhiji became to sad for what he had done, that he cried bitterly. Gandhiji never forgot this incident. Gandhiji make up his mind never again to do any thing that would hurt others.

Gandhiji studied law in England. Before he left, he promised his mother never to drink wine. He kept his promise to the letter of the law. After taking his Bar - at - law, Gandhiji returned to India. He set up practice as a lawyer.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

He next went South Africa and helped the indians to fight against the unjust laws of the white South African Government.

Gandhiji traveled all over the village of India. He found the Indian farmers were poor and had no road, hospitals and schools. Gandhiji's heart was moved on seeing their condition. He saw many people in India had no jobs. So he wanted every Indian to buy, only Indian made things. He also wanted Indian to join together and get freedom for India, from the British rule, many people joined with Gandhiji. He and his followers were jailed many times.

At last, in 1947, the British gave freedom to India. It was through Gandhiji's efforts that India won her freedom so, Gandhiji is called the father of the Indian Nation.

Gandhiji was a great man. He led a simple life. He wore only a loin cloth. He loved the Harijans. He held prayer meetings twice a day and taught good things to the people.

By :
**Mrs. P. Ravichandran,**
Teacher - K/Talatuoya T.M.V.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# KANDURATA CURTAINS

*For Excellent Vertical Blinds, Curtaining Service & Upholstery Materials with Tailoring & Complete Service*

**35/1/1, Silverdale Shopping Complex,**
**Yatinuwara Veediya,**
**Kandy.**

**Tel: 081-2203840, 0777-172497**

*With Best Compliments From:*

**Tel: 072 - 5961808, 075 - 7302325**


# AYNGARAN VIDEO

High Quality Tamil, Hindi & English DVD Flims

**# 12/, 1/2, Castle Lane,**

**Kandy.**





Songs, Games, Software,
Films, Photos For Phones



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# RANJANA'S

*Specialist in Natural Silks, Sarees,*
*Pashmina Shawls,*
*Batiks & Wood Carvings.*



**201, 202, Central Market,**
**Kandy.**

**E-mail: ranjanas1@yahoo.com**

*With Best Compliments From:*

## Anoki Jewellers

**# 72, Yatinuwara Veediya,**
**Kandy.**

**Tel: 081 - 2232932**

*With Best Compliments From:*

## THILAK HARDWARE

**Main Street,**
**Talatuoya**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பாடசாலையின் முகாமைத்துவக் குழு**

**இ-வ:** திருமதி K.கலைவாணி, திரு S.செல்வகதிர்காமர், திரு E.இந்திரகுமார் (உப அதிபர்), திரு V.தங்கவேல் (அதிபர்)
திருமதி B.இராமச்சந்திரன், திருமதி A.சந்திரகுமாரி, திருமதி K.இரவீந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹட்டன் ரயில்வே ஸ்டேசன். கொழும்பிலிருந்து பதுளைக்குப் பயணிக்கும் "பொடிமெனிக்கே" ரயிலுக்காக நின்று கொண்டிருந்தேன். ரயிலும் வந்து மேடையில் நின்றது. அதிலிருந்து ஒரு வயோதிப மாது சிரமப்பட்டவாறு இறங்கிக்கொண்டிருந்தார். கதவு விளிம்புக் கம்பிகளை இறுகப் பற்றி மெல்ல, மெல்ல என இறங்க முயன்ற அப்பெண்மணியை நோக்கி என் கரம் இயல்பாகவே உதவ நீண்டது. ஆதரவுடன் பற்றியது, இறங்கிடுவதற்கு உதவியது. இறங்கியதும் அந்த வயோதிப மாது என்னை நோக்கி, "தேவி இராமச்சந்திரன், தேவி இராமச்சந்திரன்" என்றார். "திடுக்"கிட்டு அவர் முகத்தைப்பார்த்தேன். என் பாடசாலை நாமம் அது தான். ஐயோ! என் மிஸ் - மிஸ் ரூபராணி ஜோசப் என் குரு. மிஸ் மிஸ்....... சுகமாக இருக்கின்றீர்களா? Sorry மிஸ், கவனிக்கவில்லை மிஸ் முகத்தை" பதறினேன். அதனால் என்ன? நீர் சுகமாக இருக்கிறீரா? பழுதாய்ப் போனீர். உமக்கு உந்த குளிர் சரி வராது போலும். ஏன் கண்டியை விட்டுப் போட்டு வந்தனீர்? மிஸ் அத்தனை ஆண்டுகள் கழித்தும் என்னை நினைவில் வைத்திருந்தது மகா ஆச்சரியம். நான் மிஸ்சை அடையாளம் கண்டுகொள்ளத் தவறிய வேளை, ரயிலை விட்டு இறங்கக் கூட முடியாதளவு பலவீனப்பட்டுப் போன நிலையில் ஆயிரமாயிரமான அவர் மாணவிகள் மத்தியில் என்னை நினைவு வைத்து பெயர் சொல்லி அழைத்துக் கதைத்தது, சிலிர்ப்பாக, சந்தோசமான சந்தோசமாக இருந்தது. மிஸ் எழுதிய நூலொன்றுக்கு ஹட்டனில் கௌரவிப்பு நிகழ்வு என்றும், அதில் கலந்துக் கொள்ளும் பொருட்டு வந்ததாகவும் கூறினார். நானும் அதே ரயிலில் ஏற வேண்டியிருந்ததால் தவிர்க்க முடியாமல், அதிகம் கதைக்க அவகாசமின்றி ரயிலில் ஏறினேன்.

அவர் கற்றுக்கொடுத்த மாணவி நான், ஒட்டிக் கொண்டிருக்கும் பழக்க, வழக்கங்கள் நேர்த்திகள் என இன்னமும் என்னில் (எங்களில்) இருக்கிறது என்றால் அவை எல்லாம் அந்நேரம் எங்களுக்குக் கற்பித்த இம்மாதிரியான ஆசிரியப் பெருமாட்டிகள் எமக்குப் போட்ட பிச்சை. எனக்கே தெரியாமல், இறங்க சிரமப்பட்டவருக்கு இயல்பாய் என் கை நீண்டதும் அதனால்தான்.

பிற்பாடு மிஸ் ரூபராணி ஜோசப் அவர்களை நேரில் காண்பதற்கு கண்டிக்கு அவர் வீட்டுக்குப் போயிருந்தேன். மிஸ்ஸுக்கு என்ன பிடிக்கும் என்றே தெரியவில்லை. எதையோ வாங்கிக் கொண்டுப் போனேன். நிரம்ப விசனப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உவை எல்லாம் எதற்கு? நீர் வந்ததே காணும். உம்முடைய அன்பு, பாசம் தான் தேவி எனக்கு சந்தோசம் என்றார். அவரெழுதிய "ஏணியும் தோணியும்" புத்தகத்தில் வாழ்த்துக்கள் எழுதி வழங்கினார். தன் வீட்டில் தன் அன்புக்கும், உதவிக்குமாய் இருந்தப் பெண்ணை கடைக்கு அனுப்பி சிற்றூண்டிகள் வாங்கி வரச்செய்து அன்போடு பரிமாறினார். என் பெண்ணிடம், "உம்முடைய தாய், என்ட மாணவி. நல்ல ஒரு .... ஏதேதோ புகழ்ந்துச் சொல்ல எனக்கு சங்கோஜமாக இருந்தது. அவர் பாசம் என் மனதை தொட்டு துடிக்கப் பண்ணியது. பிற்பாடு நான் என் மகளிடம் சொன்னேன் "சொத்து, சுகம், பணம், காசு என்னால் அத்துனையாய் உனக்கு சேர்த்து கொடுக்க முடியவில்லை என்னால் உனக்கு சொத்தாக கொடுக்க முடிந்தது இந்த நல்ல பெயர் மட்டும் தான்" என்றேன்.

மிஸ் எனக்கு தரம் இரண்டு வகுப்பாசிரியை, மிஸ் தான் எம் கதாநாயகி. குண்டு முத்து கட்டிய ஜிமிக்கி போட்டுக் கொண்டு, காதோர சுருள் கேசத்தில் ஒற்றை ரோஜா சொருகி பள பளவென பட்டுச் சேலையை அலுங்காமல் அணிந்து வருவார். சொக்கி நிற்போம். மிஸ்ஸுக்கு ரோஜா கொடுக்க மாணவிகள் போட்டி போடுவோம். மிஸ் அடித்ததே இல்லை. ஆனால் ஒரு தடவை வாய்ப்பாடு பாடமாக்காமல் மாட்டிக்கொண்டேன். பாடசாலை விட்டு பின்நேரம் நிற்க வைத்து தானும் நின்று பாடமாக்கி ஒப்புவிக்க வைத்தார். அன்று பயந்து பாடமாக்கிய வாப்பாடுகள் இன்னமும் பாடம். மிஸ் அப்போதே பத்திரிகைக்கு எழுதுவார். அவர் புகைப்படம், பேட்டி அந்த காலங்களிலேயே பிரசுரமாயின. மிஸ் கொண்டு வந்து காட்டினார். மிஸ் என்றாலே பிரமிப்பாக இருக்கும். மிஸ்ஸிடம் அழகான ஒரு கைப்பை இருந்தது. நீர்த்துளிகள் சிதறல், சிதறலாக இருப்பது போன்று அதிலிருக்கும். வகுப்பு மாணவிகள் முழுப்பேரும் பிய்த்து எடுக்காத குறையாக தொட்டு, தொட்டு பார்த்து மகிழ்வோம்.

தரம் ஏழிலும் மிஸ் அவர்களே என் வகுப்பாசிரியை. "நீதி - பொது" என்பது அவரது தாரக மந்திரம் "கடமை, கண்ணியம், கட்டுப்பாடு" - கரும்பலகையில் எழுதிப் போடுவார். வகுப்பிலேயே மிக அழகான கையெழுத்துள்ள மாணவியின் கொப்பியை ஒரு தினம் கூப்பிட்டு என்னிடம் காட்டினார். என்னையும் அப்படி எழுத முயற்சிக்க ஊக்கினார். ஒல்லிக் குச்சியாக நிற்பேன். "தேவி இராமச்சந்திரா" நேராய் நில்லும், கூனாதேயும் என்றிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இஞ்சைப் பாரும் தோள் உப்பிடி ஸ்டேரட்டாக இருக்கோனும். "என்று செய்துக் காட்டி திருத்துவார். தமிழ், கணிதம், சரித்திரம், பூமி சாஸ்திரம் ..... எத்தனையோ பாடங்கள் மிஸ் படிப்பித்தார். உண்மையில் என்ன பாட ஆசிரியர்? தெரியவில்லை. அவை மட்டுமின்றி நிற்க, நடக்க, எழுத, வாசிக்க, தெரு ஓரமாய் போயே எச்சில் துப்ப வேண்டும் .... என்பது வரை படிப்பித்தார்.

இப்போதெல்லாம் இசை, நடனம், எழுத்து, சரித்திரம் என சகல பாடங்களுக்கும் வெவ்வேறு ஆசிரியர்கள். பொறுப்புகள் தட்டிக்கழிக்கப்படுகின்றன. ஆனால் மிஸ் ரூபராணி ஜோசப் அவர்கள் எங்களுக்கு நடனங்கள் பயிற்றுவித்திருக்கிறார். கலை விழாக்கள் பல அவர் பொறுப்பில் நடந்தன. இன்றும் நன்றாகப் பேசுகிறேன் என்ற பெயர் எனக்கு இருக்கின்றது என்றால் மிஸ் எனக்கு இட்ட மடிப்பிச்சை. நாடகங்களில் நடிக்கவும் அவர் தான் எங்களுக்குப் பயிற்றுவித்தார். உச்சரிப்புத் தான் உதைக்கும். ஒரு "மலை"யை மெல்லவும், மற்ற "மழையை" உரத்த சத்தமாகவும் சொல்லி சமாளிப்போம். மேடையில் எங்களை நடிக்க வைத்து விட்டு, விசாலமான நீண்ட அந்த கண்டி நல்லாயன் மகளிர்க் கல்லூரி மண்டபத்தின் கடைசி முடிவில் போய் மிஸ் நிற்பார். "காணாது; காணாது; சத்தம் காணாது என அங்கிருந்து சத்தமிடுவார். நாங்களும் நெஞ்சைப் பற்றிக்கொண்டு "வாள்" "வாள்" என அலறுவோம். "ரூபாவதி", "பொன்னியின் தியாகம்", நகைச்சுவை நாடகங்கள் என பற்பல வெளியார் டிக்கட் விற்பனையோடு அரங்கேறின.

ஒன்றில் ராஜா, மற்றதில் பொன்னி, நகைச்சுவையில் ஆண் வேடம் .... எத்தனையோ முதலிடங்கள் நடிப்பில் பேச்சில், எழுதுவதில்........... எல்லாம் என் அன்பு மிஸ்ஸுக்கே சமர்ப்பணம்.

அவர் சுகயீன முற்றதைக் கேள்விப்பட்டு பார்க்கப்போன வேளை அவர் படுக்கைக்கெதிராக மேலே அணிவகுத்து நின்ற கேடயங்களைக் காட்டினார். அம்மாவிடம் இருந்து....... "நூலைக் கையெழுத்திட்டு தந்தார். என்னை எழுதுமாறு ஊக்கினார். "அனுப்பினேன் மிஸ் எதுவுமே பிரசுரமாகவில்லை என்றேன் சோர்வாக! "அப்படி சொல்லாதேயும்" என அறிஞர் அண்ணாதுரையின் ஆரம்பதோல்விகள், அயராத முயற்சி - பின் கிட்டிய வெற்றி எல்லாம் புள்ளி விபரங்களாய் விளக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வியாதி படுக்கையில் மிஸ்ஸுக்கு ஒரு வெளிநாட்டு உடையைக் கொடுத்தேன். "எண்ட பிள்ளை வாங்கிக் கொண்டு வந்துட்டா" என தன் வீட்டாரை எல்லாம் அழைத்துக் காட்டினார். மிஸ் வீட்டாரின் வசதிக்கு என்னது ரொம்பவும் அற்பம். ஆனால் மிஸ் சிலாகித்த விதம், முகத்தில் தெரிந்த பெருமிதம்........ என் முடிவில் மறக்கபட வேண்டியது.

உயர்தரம் விஞ்ஞானம் படித்த நேரம், எங்களை கண்டி ஓடியன் தியேட்டரில் அப்போது ஓடிக்கொண்டிருந்த சினிமாவுக்கு கல்லூரி மூலமாக கூட்டிப்போனார்கள். நான் முதல் நாள் அம்மாவிடம் அனுமதி வாங்க மறந்தே விட்டேன். எல்லாருமாக படத்திற்குக் கிளம்பும் போது வீட்டில் அனுமதி கேட்காதது பயமாக இருந்தாலும் படம் பார்க்கும் ஆசையில் கிளம்பி விட்டேன். மத்தியானம் இரண்டு மணி படக்காட்சி. தாயார் நான் வீட்டுக்கு வர தாமதமானதும் (கல்லூரி பிற்பகல் மூன்று மணிக்கே விடும்) கோபமாக மிஸ் வீட்டுக்குப் போய் இருக்கிறார். மிஸ் என்ன தெரியுமா சொல்லி இருக்கிறார். "தேவி அருமையான பிள்ளை அவ தப்பு செய்ய மாட்டா. அவளை மகளாக அடைஞ்சது நீங்க செய்த பாக்கியம்" ............ இத்தனைக்கும் அன்று விஞ்ஞானப் பிரிவினர் படத்திற்கு போனது மிஸ்ஸுக்கு தெரிய வாய்ப்பில்லை. கடைசியாக கட்டிலில் அணைத்துக் கொண்டு ஜெபித்தார் கண்ணீரோடு. கர்த்தாவே இந்த மகளை ஆசீர்வதியும். இந்த குடும்பத்தைக் கைவிடாமல் காத்துக்கொள்ளும்". என் அன்பு ஆசிரியத் தாயே! என்னைப் பெற்றவளை விடவும் என்னை நம்பியவர் நீங்கள். நெறிப்படுத்தி வாழ வைத்தவர் நீங்கள். பவானி என்கிற உங்கள் "தேவி இராமச்சந்திரன்" எழுத்துலகில் சின்னதாக மின்ன உங்கள் ஊக்குவிப்பு காரணம். அற்புதமான என் அரிய ஆசிரியரே! எதுவுமே உங்களுக்கு நாங்கள் செய்யவில்லை. இதோ மனம் நிறைந்த நன்றியுடன் மகளாக என் எழுத்து மூலம் என் காணிக்கையை

**திருமதி. பவானி இராமச்சந்திரன்**
விஞ்ஞான ஆசிரியை
க/தலாத்து ஓயா த.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சி

*தடைகள் பல தடுத்தாலும்*
*தாண்டிச் செல்லவே*
*முயற்சிக்கிறது*
**ஆற்று நீர்......**
*தினம் தினம் தேய்ந்தாலும்*
*ஏதோ ஒரு நாள்*
*மீண்டும் எழுகிறது*
**திங்கள்.....**
*சிதைந்து போகிறோம்*
*என்றாலும் தம்*
*சிரிப்பை காட்ட மறுப்பதில்லை*
**பூக்கள்.....**
*முயற்சி என்றுமே*
*இகழ்ச்சி அடைவதில்லை*
*முயன்றால் முடியாதது எதுவுமில்லை*
**நீ**
*மீண்டும் மீண்டும்*
*சொல்லிப் பார்*
*முயற்சி திருவினையாக்கும்*

**M. பிரமிளா** - தரம் - 10

# தாயன்பு தனியன்பு

நாம் அனைவரும் தாய் என்ற இரு எழுத்தில் பிறந்துள்ளோம். இவ்வுலகில் எம்மைச் சூழவுள்ள எமது உற்றார்கள், உறவினர்கள், நண்பர்கள் என்ற உறவுகளை விட தாய் உறவே பெரிது. இவ்வுலகில் உள்ள சிலர் தாயன்பை புரிந்து கொள்ளமாட்டார்கள். நாம் பசியில் அழும் போது நமக்காக கருவறையில் காய்கறிகள் சமைத்து தந்தவள் தாயாவாள்.

நாம் துன்பத்தில் அழுதால் நம் கண்ணீரைத் துடைக்கும் கைக்குட்டையாய் நம் ஒவ்வொருவர் அருகிலும் இருப்பவள் தாயாவாள். இதுவே உயர்ந்ததான தாயன்பு ஆகும். நாம் எட்டி நடந்தபோது, எட்டி பிடித்த போது, எட்டி எறிந்தபோது, எட்டாது விழுந்தபோதும் நம் கண்ணீரைத் துடைக்கும் கைக் குட்டையாய் நம் ஒவ்வொருவரின் அருகில் இருப்பவள் தாயாவாள். இதுவும் ஒரு உயர்ந்ததான உன்னதமான தாயன்பாகும்.

**M. ரிதுஷன்யா** - தரம் - 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைகள்

01. என்னிடம் நாடு உண்டு வீடு இல்லை. கடல் உண்டு மீன்கள் இல்லை. மலை உண்டு பறவைகள் இல்லை. காடு உண்டு மரங்கள் இல்லை. நான் யார்?

**பூகோளப்படம்**

02. நூல் நூற்கும் நெசவாளிக்கு கட்டிக்கொள்ள துணி இல்லை நான் யார்?

**சிலந்தி**

03. இரண்டு நண்பர்கள் எப்பொழுதும் சேர்ந்தே இருப்பார்கள். ஒருவன் முன்னால் போனால் அடுத்தவன் பின்னால் போவான் அவர்கள் யார்?

**கால்கள்**

04. கட்டி வைத்தால் நடந்து போவான். அவிழ்த்து விட்டால் சும்மா கிடப்பான் அவன் யார்?

**சப்பாத்து**

05. அம்மா படுத்து இருப்பாள் மகள் ஓடிக் கொண்டே இருப்பாள் அவர்கள் யார்?

**அம்மி, குழவி**

06. நெருப்பு மேலே கறுப்புக் குதிரை அதன் மேலே வெள்ளையன் மாறி மாறிக் குதிக்கின்றான் அவர்கள் யார்?

**தோசைக் கல், தோசை**

07. ஆசாரி பண்ணிய, அவமானத்திற்கு ராசாரி ராக்கள் எல்லாம் தலை குனிகின்றார்கள் அது என்ன?

**வாசற் படி**

08. ஆயிரம் கண்ணுடையான் இந்திரன் அல்ல அநேகமுடி சூழ்ந்திருக்கும் அரக்கனும் அல்ல, உயிர்களைக் கொல்வான் எமனும் அல்ல தோள் மேல் ஏறிச் செல்வான் பிள்ளையும் அல்ல அவன் யார்?

**மீன் வலை**

09. இணை பிரிய மாட்டார்கள் நண்பர்கள் அல்ல ஒன்று சேர மாட்டார்கள் பகைவர்கள் அல்ல அவர்கள் யார்?

**ரயில், தண்டவாளங்கள்**

10. உட்கார்ந்தால் பேசுவான் நின்றால் பேச மாட்டான் அவன் யார்?

**நாக்கு**

K. **நிஷாந்தனி** - தரம் - 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலையின் ஒழுக்காற்றுக் குழு



**அமர்ந்திருப்போர் : (இ.வ)** செல்வன் M.தனுஷன், திரு E.இந்திரகுமார் (உப அதிபர்), திரு V.தங்கவேல் (அதிபர்) திருமதி K.சாந்தி, திருமதி N.தில்லைநாயகி, செல்வி R.இந்துஷானி

**நிற்போர் : (இ.வ)** செல்வி M.பிரமிளா, செல்வி B.வினோஜா, செல்வி L.லக்ஷினி, செல்வி S.அபிலாஷினி, செல்வன் T.பார்த்தீபன், செல்வன் S.வைதீஸ், செல்வன் J.ஜோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# L.N.K. CERAMICS

Sanitary Wares
General Hardware
Bathroom Accessories
Lanka Wall Tiles
Floor Tiles - Lanka
PVC Pipe
Hot Water Pipe & Plumbing Fitting Etc.

ALL KINDS OF STYLE & DESIGN

**# 17, COLOMBO STREET, KANDY.**

**081 2204205**

*With Best Compliments From:*

# KANDY OIL TRADERS

**# 176, Colombo Street,**
**Kandy.**

**Tel: 060 - 2885521**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

අපෙන් සුභ පැතුම් !

# වරුණ පොත් හල

සියලුම වර්ගයේ පාසල් පොත් හා
උපකරණ ඉතා අඩු මිලට

**2 G 4, සීගෝ ප්ලාසා වෙළඳ සංකීර්ණය**
**තලාතුඔය පාර,**
**මහනුවර**

*With Best Compliments From:*

# SAMPATH STEEL

*Importers & General Hardware Merchants*

**297, Old Moor Street,**
**Colombo - 12**

**Tel: 011 - 2440964, 2423789**
**Fax: 011 - 2478080**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# Devi Jewellers

22Kt Sovereign
Gold Jewellers



**# 38, D.S. Senanayake Veediya,
Kandy.**

**Tel / Fax : 081 - 2224110**



*With Best Compliments From:*

# Rathna Maligai

***Renowned Jeweller for
Generations Since 1956***

**# 48 & 50, D.S.Senanayake Veediya, Kandy**

**Tel: 081 - 2234438, 081 - 4951315**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# MEGA COLLECTIONS

Ready-Made Shirt, Pants, Blouse, Skirts,
Saress, Salwars, Denims, Baby Suits
& Dress Materials etc.



**# 170, Colombo Street,**
**Kandy.**

**Tel: 081 - 2239156**

*With Best Compliments From:*

# DOLLAR TRADERS

***Dealers in Brass Sheets, Imported Crucible,***
***Industries Chemicals and Bathik Wax etc.,***

**27, Yatinuwara Patu Mawatha,**
**Kandy.**

**Tel: 081 - 2232629, 2224539**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றாடற் பராமரிப்புக்குழு



**அமர்ந்திருப்போர் : (இ.வ)** திருமதி. W.G. வயலட், திருமதி. C. செல்வமலர், திரு. S. சசிகுமார், **திரு V. தங்கவேல் (அதிபர்)**, திருமதி. S. சிவகுமாரி, திருமதி. S. மலர்சாந்தி, திருமதி. S. பஞ்சகல்யாணி, செல்வி. S. கோமதி

**நிற்போர்: (இ.வ)** செல்வன். R. சதீஸ், செல்வன். S. அருண், செல்வன். K. தினேஷன், செல்வன். R. சஞ்சீவன், செல்வி. T. சர்மிகா, செல்வி. S. ஜனனி, செல்வி. S. வினோதினி, செல்வி. B. ஸ்ரீபிரியா, செல்வி. M. இலாவண்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் மொழிகள்

## அறிவு

- ஓர் அறிவாளியின் பேனா ஆயிரம் முட்டாள்களின் ஈட்டிகளையும் வெல்லும் திறன் கொண்டது.
- படித்த ஒருவன் அவன் படித்த அளவிற்கு அவனது அனுபவமும் சேரும் போது அவன் மேதையாகின்றான்.
- அறிவாளிகளுக்கு சான்றோர் எழுதிய அறிவுரை நூல்கள் தான் அழிவில்லா செல்வமும் வழிகாட்டியும்.

## கடவுள் பெருமை

- பண பலம், மன பலம், ஜனபலம் ஆகிய எல்லாம் இருந்தாலும் இறைபலம் இல்லையேல் எதிலும் வெற்றி கிடையாது.
- இறைபலம் இல்லா காரியம் உப்பில்லா உணவு போன்றது.
- மனிதனுக்கு கடவுளால் கொடுக்கப்பட்ட சிறந்த ஆயுதம் மனோதைரியம்.
- முயற்சி மனிதனுடையது, முடிவு கடவுளுடையது.
- உண்ணும் போதும், உறங்கும் போதும் கடவுளை வணங்குபவனே உண்மையான கடவுள் பக்தனாவான்.
- ஒருவன் உலகிற்குத் தெரியாமல் ஏராளமான தவறுகள் செய்யலாம் ஆனால் கடவுளுக்குத் தெரியாமல் எந்த தவறும் செய்ய முடியாது.

## நம்பிக்கை

- எல்லோரையும் நம்புவது ஆபத்து யாரையும் நம்பாமல் இருப்பது பேராபத்து.

**ஹரிஹரன் ரொஷான்** - தரம் - 9


# பழமொழிகள்

அலை மோதும் போதே தலைமுழுகு
ஆபத்துக்குப் பாவம் இல்லை
இனம் இனத்தைச் சேரும்
ஈயார் தேட்டை தீயார்கொல்வார்
உப்பிட்டவரை உள்ளளவும் நினை
எடுக்கிறது பிச்சை ஏறுவது பல்லக்கு
ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது
ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
ஒன்று பட்டால் உண்டு வாழ்வு

S. **அர்ஜீன்**
தரம் - 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாய்

அன்பின் இலக்கணமே தாய்
பாசத்தின் பிறப்பிடமே தாய்
விடியலின் விளக்கே தாய்
உயிர் சுவாசமே தாய்
எனக்கு உருவம் கொடுத்தவரே தாய்
பண்பின் ஊற்றே தாய்
வழிகாட்டலின் மேதையே தாய்
கண் கண்ட தெய்வமே தாய்
நீ இன்றி இப்பூலகில் ஏதம்மா நான்

S. **சம்மியா**
தரம் - 8

# சுருக்கக் குறியீடுகள்

| | |
|---|---|
| 1. பி.ப. | - பிற்பகல் |
| 2. மு.ப. | - முற்பகல் |
| 3. கி.பி. | - கிறிஸ்துவுக்கு பின் |
| 4. கி.மு. | - கிறிஸ்துவுக்கு முன் |
| 5. இ.மி.ச. | - இலங்கை மின்சார சபை |
| 6. இ.போ.ச. | - இலங்கை போக்குவரத்து சபை |
| 7. ஐ.தே.கட்சி | - ஐக்கிய தேசிய கட்சி |
| 8. ப.த. | - பதிவுத் தபால் |
| 9. இ.ம.வ. | - இலங்கை மத்திய வங்கி |
| 10. க.பொ.த (சா/த) | - கல்வி பொதுத் தராதர சாதாரண தரம் |
| 11. க.பொ.த (உ/த) | - கல்வி பொதுத் தராதர உயர் தரம் |
| 12. தே.நீ.வ.ச. | - தேசிய நீர் வடிகால் சபை |

R. நிஷாந்தன்
தரம் - 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்களும் ஆசிரியர்களும்

1. சிலப்பதிகாரம் - இளங்கோவடிகள்
2. மணிமேகலை - சீத்தலைச்சாத்தனார்
3. பெரியபுராணம் - சேக்கிழார்
4. அரிச்சந்திரபுராணம் - வீரகவிராயர்
5. சீறாப்புராணம் - உமறுப்புலவர்
6. திருமணிமாலை - சேகுனாப்புலவர்
7. குண்டலகேசி - நாதகுத்தார்
8. இன்னாநாற்பது - கபிலர்
9. தொல்காப்பியம் - தொல்காப்பியர்
10. சூடாமணி - தோலாமொழித்தேவர்
11. யாழ் நூல் - சுவாமி விபுலானந்தர்
12. இராமாயணம் - வான்மீகி (வட மொழி)
13. இராமாயணம் - (தமிழ்) கம்பர்
14. மகாபாரதம் - வியாசர்
15. திருவாசகம் - மாணிக்கவாசகர்
16. தேம்பாவணி - வீரமாமுனிவர்
17. மகாவம்சம் - மகாநாம தேரர்
18. சீவக சிந்தாமணி - திருத்தக்க தேவர்
19. நற்சிந்தனை - யோகர்சுவாமிகள்
20. நளவெண்பா - புகழேந்திப்புலவர்
21. நன்னூல் - பவணந்தி முனிவர்
22. வெற்றிவேட்கை - அதிவீரமாபாண்டியர்
23. மனோன்மணியம் - சுந்தரம்பிள்ளை
24. குறிஞ்சிப்பாட்டு - கபிலர்
25. நல்வழி - ஔவையார்
26. பாஞ்சாலி சபதம் - பாரதியார்
27. கீதாஞ்சலி - இரவீந்திரநாத் தாகூர்
28. திருப்புகழ் - அருணகிரிநாதர்
29. நாலடியார் - பதுமனார்
30. பராபரக்கண்ணி - தாயுமானவர்
31. மகாபாரதம் - (தமிழ்) வில்லிபுத்தூரார்
32. சத்திய சோதனை - காந்தியடிகள்

**பா. ஸ்ரீபிரியா** - தரம் - 11

# நான் நேசிக்கும் பாடசாலை

மலைமகள் வளம் சூழ்ந்த மத்திய மலைநாட்டில் கண்டி மாநகரில் தலாத்துஓயா என்னும் பிரதேசத்திலே நான் நேசிக்கும் எனது பாடசாலையான தலாத்து ஓயா தமிழ் மகா வித்தியாலயம் அமைந்துள்ளது. 1957ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இப்போது பல வரலாறுகளைக் கொண்டதாக காணப்படுகிறது.

இது தரம் 1 - 13 வரையான வகுப்புகளைக் கொண்டுள்ளது. இப் பாடசாலையில் 180க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். இங்கு 23 ஆசிரிய ஆசிரியைகள் கல்வி கற்பிக்கின்றார்கள். இப் பாடசாலையில் அடுக்குமாடி கட்டிடங்கள் பல உண்டு. அது மட்டுமல்லாமல் நூலகம், விஞ்ஞான கூடம், கணணி அறை போன்ற வசதிகளும் உண்டு. இப்பாடசாலை இயற்கை எழில் மிக்கது.

**கலைவாணி** தரம் - 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறியீடுகளும் விளக்கமும்

01. **UNCED** - United Nations Conference or Environment and Development
ஐக்கிய நாடுகள் சபையின் சூழல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான மாநாடு

02. **UNEP** - United Nation Environmental Programme
ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றாடல் வேலைத்திட்டம்

03. **IPCC** - Inter Government Panel on Climate Change
காலநிலை மாற்றம் தொடர்பான அரசாங்கங்களுக்கிடையிலான குழு.

04. **IUCN** - International Union for Conservation of Nature
இயற்கைப் பாதுகாப்புக்கான சர்வதேச சங்கம்.

05. **SAARC** - South Asian Association for Regional Cooperation
தெற்காசிய வலய ஒத்துழைப்பு அமைப்பு

06. **CGIAR** - Council for Greenery International Agriculture and Research
பசுமைப்புரட்சி தொடர்பான சர்வதேச விவசாய ஆராய்ச்சி சபை

07. **FAO** - Foods and Agricultural Organization
உலக உணவு விவசாய அமைப்பு

08. **WFP** - World Food Programme
உலக உணவு திட்டம்

09. **WFC** - World Food Council
உலக உணவு கவுன்சில்

செல்வி R. **இந்துசானி** - தரம் - 12

# Where do we go.........

'Theme of March' on earth!
In search, something somewhere,
In silence or louder to laugh! or to cry!!

Welcome! All for the ride on the
'Stage of men'
Hope like rolling stone;
Repeated forever;
Men with spiritual hymns;
Some with free hum
Is there one to lead us...! Or
Are we commanded!
To realize the hope!

Men who've stepped the same pace
Have quitted the race....Silently!

Do Determination and Destination
Have rationality or else
Any mean!!

'Theme of March'
In search, something somewhere
Let's go on earth.... till the
End of the last of all
Think... Do we go...?
Where do we want to...!

**S.SELVAKADIRGAMAR** - (Teacher of English)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


*With Best Compliments From:*

# Kandy Book Shop

SCHOOL & OFFICE STATIONERS





**# 163, S.W.R.D. Bandaranayake Mw.,**
**Kandy.**

**Tel: 0812- 232 675**
**Mob: 0775- 508 058**

**kandybookshop@hotmail.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# NEW SHAKTHY EGG CENTRE

DEALERS IN FORAGE, ANIMAL FOODS, VETERINARY MEDICINES, EGGS, CHICKEN & GENERAL MERCHANTS

Agents For Prima Sausages

**# 227 A, Colombo Street,**
**Kandy**



Tel: 081 - 4470472





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பாடவிதான செயற்பாட்டுக்குழு



**(இ.வ)** திருமதி E.G. சவரியப்பர், திருமதி S. பஞ்சகல்யாணி, திருமதி S.J.T. டிலக்ஷனி, **திரு V. தங்கவேல் (அதிபர்),** திரு S. செல்வகதிர்காமர், திருமதி S. கோமதி, திருமதி V.M. மேனகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

**Pharmacy Rex**



23, Dalada Veediya,
Kandy.

Tel: 081 - 2223277

*With Best Compliments From:*

**O. SIVA**

46, Peradeniya Road,
Kandy.


*With Best Compliments From:*

**ஸ்ரீ கணேசானந்த**

பிராமணாள் ஹோட்டல்

No. 42, Peradeniya Rd,
Kandy.

Tel: 081 - 2233231
081 - 2223489



*With Best Compliments From:*

**Smarrt Point**

Dealers in Textiles, Fancy Goods,
Cosmetics, Bags & Baby Care

98/A, Dalada Veediya,
Kandy.



Tel: 081 - 2235965
077 - 1614012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# S.K. COMPANY

# 93, Colombo Street,
Kandy.

Tel: 081 - 2222492

*With Best Compliments From:*

# GANESH STORES

# 89, Main Street,
Talatuoya

Tel: 081 - 2404425



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Science and Technology {in 21st century}*

We are living in the 21st Century. This Century is known as an era of brilliant achievements in Science and Technology. Science and Technology began to grow from 19th Century. Now world is like a village. It's called "The Globalization". Globalization makes our world and people life very simple. This is done by scientific technology. Science which is one of the branches of systematic knowledge. And the technology this also belonging to a particular branch of knowledge. The ancient people haven't had enough scientific knowledge, so science wasn't grown in that period. But the 19th Century people started to think; Then science grow very quickly.

During that period in England started the industrial change. It's called "Industrialization". And they built many industries at the time. Then they grew very quickly, because they had lot of minerals. I mean they had metals, fuels and human talents, so they grew very fast. They made Aero Planes, Buses, Cars and many things. Later the world's biggest countries have seen and they also followed the Industrial concept Science and Technology grew very well.

Now Science and Technology takes a part of our life. We can't live without Science or Technology. These things are combined with us. Now Science has touched the sky. Science is not a subject, it's our life. Now we are dominated by Science and Technology. Take the Pen or anything which is based on Science and Technology. Now the science which is the most important fact of our human life. We can't avoid Science and Technology.

The vehicles have made our life very easy. These vehicles are based on technology. Now vehicles have more facilities. I mean the Air condition, Power shutters, Auto gear system, Wow! What a brilliant achievements have reformed the technology. Now the Engineers are building up many mega constructions. For example Thibet, Lasa railway track, U.A.E. Palm Island and world biggest constructions are based on this technology. Now people make Island on the Ocean. I mean the United Arabic Emirates (Dubai) Palm Island; this one is made by Dubai King Yuvaraj Shake. What a brilliant construction.

And the second constructions this one is built up in Thibet Mountain. This is a railway construction; this one is constructed between Beijing to Lassa. This one is a one of the mega construction.

Now the world has turned into Electrical Technology. I mean now the world faces a big fuel deficit. So, now vehicles begin to run with electrical batteries. Now Toyota and Honda Company make a car which is called "Hybrid Cars". The Car can go 40km with one liter petrol. This is a great invention from the vehicle technology of the world.

In conclusion, I wish to say one thing, now the world's science has reached near the sky. And we expect many new invention and discoveries. I think one day Technological Science will make a big change in the world. Science is a new world.

**R.SATHEES** - Grade 11 (2012 Batch)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *NEW YEAR AROUND THE WORLD*

New Year is a great festival which gives a new life for us. In New Year new plans, new aims and new thoughts surround us. It is a time for new beginning commonly all the world celebrates the new year. But in some countries they have their own day for the New Year. And not only days differ but also way of celebrating also differs. Let's see some countries and their New Year dates and also their way of celebrating.

China is a communist country and also this is a country where more old beliefs are able to be seen. Here they celebrate their New Year between January 21st and February 20th. They call their New Year as "Yuan Tan". The Chinese New Year celebrations are based on bringing luck, health, happiness, and wealth till the next year. Dragon's dance is an important event in Chinese New Year. Chinese believes that evil spirit dislike the loud noise. So during their New Year they use plastic fire crackers to make a loud noise in their house.

French people call New Year as "Jourdes E trenns" which means day of New Years Present. They have dinner with their family on this day. Especially they exchange greetings cards and presents. Sometimes they were fake presents. French start to send fake presents on April 1st, which originally culminated in the New Year feast. French called the people who matched in this feast as "April Fish" or Poisson d avril. In this day many friends anonymously send each other humorous post cards imprinted with pictures of fish.

Portuguese people, who are in Portugal, celebrate their New Year in different way. They pick and eat twelve grapes from a bunch when clock strikes twelve in New Years Eve. They are doing this to ensure the twelve happy months in the coming year. Going to Carrols is the main event in Northern Portugal during this time. Especially children's carol from home to home and are given coins and treats. While they are caroling they sing "Janeiro" which is the song said Good Luck.

Thailand which is a Buddhist country is called their New Year in the name of "Songkran" and lasts for three days from 13th to 15th of April. Here in Thailand people throw water over one another which they believe that of that it will bring good rains. And also they throw water to the statues of Lord Buddha. They visit the monastery to pray and to offer gifts for the monks.

**JOHN DANUSHAN** - 12T Arts



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விளையாட்டுக் குழு

**அமர்ந்திருப்போர் : (இ-வ.)** திரு S. செல்வகதிர்காமர், திரு S. சசிகுமார், திரு E. இந்திரகுமார் ( பிரதி அதிபர்), **திரு V. தங்கவேல் (அதிபர்)**, திருமதி V.M. மேனகா, திருமதி N. தில்லைநாயகி, திருமதி S. கோமதி

**நிற்போர் : (இ-வ.)** செல்வி. T. பிரிஸ்கா ,செல்வி. M. சென்சியா, திருமதி S. பஞ்சகல்யாணி, திருமதி A. சந்திரகுமாரி, திருமதி S.J.T. டிலக்ஷனி, செல்வி. T. சசிகலா, செல்வி. G. சங்கரிபிரீத்தா

**3ம் வரிசை : (இ-வ.)** செல்வன். T. அந்தனி, செல்வன். G. பெலிக்ஸ், செல்வன். M. ஹரிநாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சும்மாவின்..... மகிமை

"செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
"சும்மா இரு! சொல்லற! என்றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிகிலனே"

- அருணகிரிநாதர்

சித்தர்கள், ஞானிகள், ரிஷிகள் மட்டுமல்ல நாமனைவரும் பயன்படுத்தும் வார்த்தை "சும்மா" இவ் ஒருவார்த்தை பல்வேறு பொருளிலும் பயன்படுத்தப்படுகிறது. இந்தச் "சும்மா" என்ற சொல்லில் என்ன விஷேசம் உண்டு. ஆராய்ந்து பார்த்தேன்.

அடேயப்பா! சும்மாவின் மகிமையே - மகிமை உதாரணத்திற்குச் சில சொற்பிரயோகங்கள் இதோ.....

| *சொற்பிரயோகங்கள்* | *பொருள்* |
|---|---|
| "பேசாமல் சும்மாயிரு" | பேசாமல் இருப்பது |
| "எதையாவது இழுத்துப் போடாமல் சும்மாயிரு" | ஒன்றும் செய்யாமலிருப்பது |
| "சும்மா சொன்னேன்" | விளையாட்டாய்ச்சொல்வது |
| "வேலைக்குப் போகாமல் சும்மா தானிருக்கின்றான்" | தொழிலின்றி இருப்பது |
| "சும்மாதான் வந்தேன்" | காரணமின்றி வருவது |
| "இது சும்மாதான் கிடைத்தது" | இலவசமாக வந்தது |
| "கொஞ்ச நேரம் சும்மா இருக்கிறேன்" | ஓய்வாக இருப்பது |
| "ஏன் சும்மா..... சும்மா.....கூப்பிடுகிறாய் | அடிக்கடி அழைப்பது |
| "சும்மா.....சும்மா வராத " | தேவையில்லாமல் வருவது |
| "அவனோட சும்மாதான் கதைத்தேன்" | கருத்தின்றிக் கதைத்தல் |
| "நீங்க சும்மா பயப்படாமல் வாங்க" | வரவிற்கு அனுமதி தேவையில்லை |
| "சும்மாகிடக்கின்ற சங்கை" | ஊதிக்கெடுத்தானாம் ஆண்டி |

சும்மா போகிறேன்! சும்மா வருகின்றேன், சும்மா இருக்கப்பிடிக்கவில்லை, சும்மாதான் கேட்டேன், படிக்காமல் சும்மாதான் எழுதினேன், சும்மாதான் பார்த்தேன்......... எத்தனை........... எத்தனை சும்மாக்கள். அத்தனையிலும் எத்தனை அர்த்தங்கள்.

*— சும்மாவின் மகிமையே மகிமை —*

த. ஸர்மிகா - தரம் - 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசம்

ஒரு நாள் லக்ஷ்மி அம்மா தூக்கம் வராமல் அழுதுகொண்டே புரண்டுப் புரண்டுப் படுத்துக் கொண்டிருந்தார். காரணம் லக்ஷ்மி அம்மாவின் மகன் குகன் அவரிடம் நடந்து கொள்ளும் விதம் லக்ஷ்மி அம்மாவை புழுவாய் துடிக்கச் செய்தது. அதையே நினைத்துக் கொண்டு அழுது கொண்டிருந்தார். காலையில் குகனின் நண்பர்கள் சிலர் குகனின் வீட்டுக்கு வந்திருந்தார்கள். அவர்களுக்கு தேநீர் கொண்டு வரச் சொல்லி அவனின் மனைவியான கவிதாவுக்கு கட்டளை இடவே அவளும் உடனே சமையலறைக்குச் சென்றாள். பின்னர் குகனுக்கு தொலைபேசி அழைப்பு ஒன்று வரவே அவனும் அவ்வீட்டின் முன்வாயிற் பகுதிக்கு வந்தான். அங்கு அவனின் தாயாரான லக்ஷ்மியைக் கண்ட அவன் "ஏய் கிழவி உன்ன யாரு இங்க வரச் சென்னது உன்னோட முகத்த பார்க்க எனக்கே புல்லரிக்குது. இதுல வேற என் நண்பர்களுக்கும் உன் முகத்த காட்டி என்னை அவமானப்படுத்தனுமா? போ.... போ.... போய் உனக்குனு ஒதுக்கி கொடுத்த ரூம்ல போய் இரு" என்று திட்டி விரட்டினான். லக்ஷ்மி அம்மாவும் அழுது கொண்டே பின்னால் ஒரு புறத்தில் இருந்த இருட்டறைக்கு சென்று விட்டார்.

குகன் லக்ஷ்மி அம்மாவின் ஒரே மகன். அதனால் லக்ஷ்மி அம்மாவும் தன்னிடம் இருந்த நகை, சொத்து என்று அத்தனையையும் விற்று விட்டு குகனுக்கு வெகு விமர்சையாக திருமணம் செய்து வைத்தார். ஆனால் குகனோ அத் திருமணத்தில் கூட லக்ஷ்மி தன் தாய் என்று கூறிக் கொள்ளவில்லை. லக்ஷ்மி அம்மா திருமண வேலைகள் அனைத்தையும் முடித்து விட்டு ஒரு ஓரமாக அமர்ந்து கொண்டிருந்தார். லக்ஷ்மி அம்மாவை தனது காரியாலயத்தில் இருந்து வந்தவர்களிடம் வேலைக்காரி எனவும், தான் ஓர் அனாதை எனவும், சிறுவயதிலேயே தாய், தந்தையை இழந்து விட்டதாகவும் பொய் கூறி உண்மைகளை புதைத்து விட்டான். இவன் இவ்வாறு கூறுவதைக் கேட்டு லக்ஷ்மி அம்மா "தான் உயிரோடு இருக்கும் போதே இவ்வாறு இறந்து விட்டதாக கூறுகிறானே" என மனதிற்குள்ளேயே அழுது புலம்பினார்.

இவ்வாறு குகன் கூறுவதற்கு முக்கியக் காரணமே லக்ஷ்மி அம்மாவின் வெந்த முகத் தோற்றம். ஒரு நாள் குகனின் காரியாலயத்திலுள்ள உயர் அதிகாரி குகனை சந்திக்க குகனின் வீட்டுக்கு வந்திருந்தார். அப்போது அவர் குகனை சந்திக்க வீட்டுக்கு வந்த வேளை குகன் வீட்டில் இல்லை. லக்ஷ்மி அம்மா மட்டுமே இருந்தார். அப்போது அந்த அதிகாரி லக்ஷ்மி அம்மாவைப் பார்த்து "அம்மா குகன் இல்லையா என்று கேட்க லக்ஷ்மி அம்மாவும், இல்லை ஐயா அவன் வெளியே சென்று இருக்கின்றான் ஏதேனும் அவசர செய்தியா சொல்லுங்கள் நான் குகனின் தாய் லக்ஷ்மி தான்" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைக் கேட்ட அவ் அதிகாரிக்கு வியர்த்துக் கொட்டியது. நீங்கள் உண்மையாகவே குகனின் தாயா? என்று அவர் ஆச்சரியமாகக் கேட்டார். ஆம் இதில் என்ன சந்தேகம் என்று லக்ஷ்மி அம்மா கேட்டுக் கொண்டிருக்கையில் வெளியே சென்றிருந்த குகனும் அவனது மனைவி கவிதாவும் உள்ளே வந்தனர். அவ் உயர் அதிகாரி குகனைக் கண்டதும் எதுவும் பேசாமல் வீட்டை விட்டு வெளியேறி விட்டார். அவரிடம் தன் தாய் உண்மையைக் கூறியதற்காக குகன் லக்ஷ்மி அம்மா மீது கோபம் கொண்டு லக்ஷ்மி அம்மாவை வீட்டை விட்டு வெளியேற்றி விட்டான். லக்ஷ்மி அம்மா எங்கே போவதென்றே தெரியாமல் கால் போன போக்கிலே தெருவோரமாகச் சென்றார். கடைசியில் ஒரு கோயில் அருகே சென்று தூண் அருகில் அமர்ந்து கொண்டு அழுது புலம்பினார்.

திடீரென்று திரும்பிப் பார்த்தார். அங்கே அவர் அருகில் அவ் உயர் அதிகாரி நின்று கொண்டிருந்தார். அவர் குகனின் அம்மாவை அடையாளம் கண்டு கொண்டு காரணம் கேட்டார். லக்ஷ்மி அம்மாவும் அழுது கொண்டே காரணத்தைச் சொன்னார். அவ் உயர் அதிகாரி லக்ஷ்மி அம்மா மேல் பரிதாபப்பட்டு அவரின் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். லக்ஷ்மி அம்மாவிடம் அவர் தான் ஒரு அநாதை எனவும் தனக்கென்று வேறு உறவுகள் இல்லையெனவும் கூறினார். அது மட்டுமன்றி லக்ஷ்மி அம்மாவை தன் தாய் போன்று கவனித்து வந்தார். காலங்கள் உருண்டோடின. லக்ஷ்மி அம்மாவும் நோய்வாய்ப்பட்டிருந்தார்.

பிறிதொரு நாள் குகனும், உயர் அதிகாரியும் சந்திக்க வேண்டியேற்பட்டது. அப்போது குகனிடம் அவ் உயர் அதிகாரியும் தனக்கு எதுவும் தெரியாது போன்று குகனிடம் தாயைப் பற்றிக் கேட்டார். அதற்கு குகன் தாய் இறந்து விட்டதாகக் கூறினான். அதைக் கேட்ட உயர் அதிகாரி "குகன் பொய் கூறாதே" என்று கோபத்துடன் கூறினார். அது மட்டுமின்றி தாயை பற்றிய உண்மைகளையும், தியாகங்களையும் பற்றிக் கூறினார். அதைக்கேட்ட குகன் இடிந்து போய் இருந்தான். தன் தாயைப் பார்க்க விரைந்து சென்றான். அங்கே அவனது தாய் இறந்து இருப்பதைக் கண்டு கதறி அழுதான். என்ன பிரயோசனம்? தாய் உயிரோடு இருக்கும் போது கவனித்திருந்தால் தாயின் அருமை புரிந்திருக்கும். தாயை மதிக்காத மகனுக்கு தக்க தண்டனை கிடைத்துவிட்டது.

*"பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு"*

செல்வி. **பா. வினோஜா**
தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*



# NAGALINGAMS JEWELLERS

*Trusted Excellence for Over 100 Years*



**101, Colombo Street,**
**Kandy.**



**Tel: 081 - 2232545**

*With Best Compliments From:*




CIC
Authorised Distributors For CIC Paint

*New*

# Candy Colour Centre

**# 93, D.S. Senanayake Veediya,**
**Kandy.**



**Tel / Fax: 081 - 2222616**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# G.C.E. O/L - Examination Results
# Subject Analysis - 2007 - 2011

| | SUBJECT | SUBJECT TEACHER | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 (Target) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | (12) Saivaism | Mrs.K.Ravindren | 85% | 94% | 89% | - | - | - |
| 2 | Saivaism | Mr.G.Muralidaran | - | - | - | 85% | - | - |
| 3 | Saivaism | Mrs.K.Shanthi | - | - | - | - | 100% | 100% |
| 4 | (22) Tamil Lang & Lit | Mrs.A.Chandrakumari | 71% | 56% | 84% | 81% | - | - |
| 5 | Tamil Lang & Lit | Mrs.K.Ravindran | - | - | - | - | 100% | 100% |
| 6 | English Lang. | Mr.S.Selvakadirgamer | 47% | 13% | 29% | 48% | 40% | 60% |
| 7 | (32) Mathematics | Mrs.S.Selin.J | 20% | 44% | 30% | 48% | - | - |
| 8 | Mathematics | Mrs.S.Radhy | - | - | - | - | 40% | 50% |
| 9 | (33) History | Mrs.K.Kalaivani | 64% | 50% | - | - | - | - |
| 10 | History | Mr.G.Muralidaran | - | - | 42% | 28% | - | - |
| 11 | History | Mrs.P.Ravichandran | - | - | - | - | 50% | 60% |
| 12 | (34) Science | Mrs.B.Ramachandren | 40% | 50% | 42% | 52% | 100% | 100% |
| 13 | (48) Tamil Lit. | Mrs.K.Ravindren | 50% | 60% | 64% | 46% | 50% | 75% |
| 14 | (61) Geography | Mrs.K.Kalaivani | - | 50% | - | - | 50% | 75% |
| 15 | Geography | Mr.G.Muralidaran | - | - | 77% | 57% | - | - |
| 16 | (83) Art | Mrs.K.Kanthimathy | 89% | 33% | 75% | - | - | - |
| 17 | Art | Mrs.S.Radhy | - | - | - | 50% | 100% | 100% |
| 18 | (44) Dance | Mrs.S.J.T.Dilakshni | - | - | - | - | 100% | 100% |
| 19 | (60) Bus & Acct | Mr.G.Muralidaran | - | - | 100% | - | - | - |
| 20 | Buss. & Acct | Mrs.K.Kalaivani | - | - | - | - | 35% | 50% |
| 21 | Agriculture | Mr.S.Selvakadirgamer | - | - | - | 70% | 85% | 100% |
| 22 | Electronic writing & short | Mrs.S.Radhy | - | - | - | - | 100% | 100% |
| 23 | Home Science | Mrs.S.Malarshanthy | - | - | - | - | 100% | 100% |
| 24 | Home Science | Mrs.C.D.Samual | 84% | 87% | 85% | 86% | - | 100% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## G.C.E. (O/l ) Examination Results
## Subjects Analysis
## (2007 - 2011)

| Subject | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| Saivaism | 85% | 94% | 89% | 85% | 100% |
| R.C | -- | -- | -- | 100% | -- |
| Tamil Language | 71% | 56% | 84% | 81% | 100% |
| English Language | 47% | 13% | 29% | 48% | 40% |
| Science | 40% | 50% | 42% | 52% | 100% |
| Mathematics | 20% | 44% | 30% | 48% | 40% |
| History | 64% | 50% | 42% | 28% | 50% |
| Art | 89% | 33% | 75% | 50% | 100% |
| Geography | 00 | 50% | 77% | 57% | 50% |
| Tamil Lit. | 50% | 60% | 64% | 46% | 50% |
| Dance Baratham | -- | -- | -- | -- | 100% |
| Electronic Writing & Short Hand | -- | -- | -- | -- | 100% |
| Commerce | -- | -- | 100% | -- | 35% |
| Agriculture | -- | -- | 70% | 85% | -- |
| Home Science | 100% | 87% | 85% | 86% | 100% |

## G.C.E. (A/l ) Examination Results
## Subjects Analysis
## (2007 - 2011)

| Subject | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 Target |
|---|---|---|---|---|---|
| Geography | 100% | 100% | 100% | 42% | 100% |
| Political Science | 100% | 100% | 100% | 85% | 100% |
| Tamil Language | 100% | 100% | 100% | 85% | 100% |
| English | 00 | 00 | 00 | 28% | 50% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்பாடசாலையில் இருந்து முதன் முறையாக பல்கலைக்கழகம் சென்றவர்கள்



செல்வி. சற்குணன் ஜீவிதா, செல்வி. சீனிவாசகம் டிலூஷியா மோகனப் பிரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புத் தோழரே

வாழிய வாழியவே
நீண்ட காலம் வாழியவே
நற் குடி நற்குண மகனாக
நற்பழக்கம் பெற்று வாழ்ந்திடவே
சமூகம் போற்றும் உத்தமனாக
சமூகப் பணி செய்திடவே

ஏழை பணக்காரன் பேதமின்றி
உழைத்து உண்ண பழகிடவே
பெரியோர் சொன்ன உறுதிமொழி
சிறியோர் நாமும் போற்றிடுவோம்

சுத்தம் சுகம் தர பேணி
சத்துணவு வேளை உண்டு வந்தால்
நோய்கள் எமை தீண்டாது
நீண்டகாலம் வாழ்ந்திடவே

கருத்து மோதல் காணும்போது
கனிவாய் நுணுகி ஆய்ந்திடுவோம்
நியாயப் பொருத்தம் எங்குண்டோ
அங்கு விட்டுக்கொடுத்து பேசிடுவோம்
பண்பும் அன்பும் கொண்டவராக
உலகில் நாளை புகழ் பெறுவோம்

S. கலைச்செல்வி - தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்வோம்

## உலக அதிசயங்கள்

உலகஅதிசயங்கள் 07 என்று தான் பலரும் கூறினாலும் மொத்தம் 21 உலக அதிசயங்கள் உள்ளன. (சரியான கணக்கு அதிலும் 18 ஆகும்) உலக அதிசயங்கள் மூன்று கால கட்டங்களாக பிரித்து ஒவ்வொரு கால கட்டத்திலும் ஏழு என்று வகுத்துள்ளனர்.

அவைகள்.

01. புராதன காலம்
02. மத்திய காலம்
03. தற்காலம் என்பனவையாகும்.


**01. புராதன காலம்**

கி.மு 2ம் நூற்றாண்டுக்குப் பின்னர் தான் புராதன கால உலக அதிசயங்கள் விபரிக்கப்பட்டுள்ளன. புராதன கால ஏழு அதிசயங்களை இவ்வாறு குறிப்பிடலாம்.

1. காபூவில் பிரமிட் (எகிப்து)
2. பாபிலோன் தொங்கு தோட்டம் (கிரேக்கம்)
3. ஜுப்பிட்டர் சிலை (கிரேக்கம்)
4. எபிசஸ் ஆர்டிமிஸ் தேவாலயம் (துருக்கி)
5. கெலிக்கர் நாசிலுள்ள கல்லறை (துருக்கி)
6. ரோட்ஸ் பேருருவச் சிலை (எகிப்து)
7. அலெக்சாண்டிரியா கலங்கரை விளக்கு (எகிப்து)

**02. மத்திய காலம்**

1. கொலோசியம் கேளிக்கை அரங்கு (ரோம்)
2. அலெக்சாண்டிரியாவிலுள்ள சுரங்கப்பாதை (எகிப்து)
3. சீனப் பெருஞ் சுவர் (சீனா)
4. கற்களால் ஆன வட்டங்கள் (இங்கிலாந்து)
5. போர்ஸ்லைன் கோபுரம் (சீனா)
6. பைசா நகர சாய்ந்த கோபுரம் (இத்தாலி)
7. ஹேஜியா சோபியா அருங்காட்சியகம் (துருக்கி)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3. தற்காலம் (நவீன காலம்)**

1. எகிப்தின் பிரமிட்கள் (புராதன காலம்)
2. துருக்கியிலுள்ள ஹசியா, சோபியா அருங்காட்சியகம் (மத்திய காலம்)
3. இத்தாலியில் உள்ள பைசா நகர சாய்ந்த கோபுரம் (மத்திய காலம்)

இம்மூன்றும் இன்றும் அழியாமல் இருப்பதால் தற்கால உலக அதிசயங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. இங்கிலாந்தில் உள்ள கற்களால் ஆன வட்டங்கள் (மத்தியகாலம்) இன்றும் அழியாமல் உள்ளது ஆனால் இதை தற்கால அதிசயங்களில் சேர்க்கவில்லை. ஏனையவை எல்லாம் அழிந்து விட்டனவாகும்.

4. ஆக்ராவில் உள்ள தாஜ்மஹால் (இந்தியா)
5. வோஷிங்டன் நினைவு மண்டபம் (அமெரிக்கா)
6. பாரிஸ் ஈஃபிள் கோபுரம் (பிரான்ஸ்)
7. எம்பையர் எங்டேஸ் கட்டடம் (அமெரிக்கா)

N. லிபோஷனா - தரம் - 12 கலைப்பிரிவு

## இல்லை!! இல்லை!! இல்லை!!

- சவுதி அரேபியாவில் நதிகள் இல்லை
- ஆப்கானிஸ்தானில் ரயில்கள் இல்லை
- ஆபிரிக்காவில் புலிகள் இல்லை
- சந்திரனில் வாயு மண்டலம் இல்லை
- வட துருவத்தில் நிலப்பரப்பு இல்லை
- வண்ணத்துப் பூச்சிக்கு வாய் இல்லை
- முதலைக்கு நாக்கு இல்லை
- பாம்புக்கு செவி இல்லை
- வெளவாலுக்கு பார்வை இல்லை
- ஈசலுக்கு வயிறில்லை
- தவளைக்கு கழுத்தில்லை
- நண்டுக்கு தலை இல்லை
- சுண்டெலிக்கு வியர்ப்பது இல்லை
- பாம்பின் கண்களில் இமை இல்லை
- ஈக்களுக்கு பற்கள் இல்லை
- யமுனை நதி கடலில் கலப்பதில்லை

S. **நிலுக்ஷன்** - தரம் - 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

## New Deen Stores

# 113, Central Market,
Kandy.

Tel: 077 - 8404949

*With Best Compliments From:*

# Well Wisher



*With Best Compliments From:*

# RIO ELECTRICALS & GEMS

*Importers & Wholesale Dealers in Electrical Goods*

161, S.W.R.D. Bandaranayake Mawatha,
Kandy.

*Tel:081-2232519* *Fax:081-4471175*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசில் பெறும் மாணவர் பெயர் விபரம் - 2012

| இல | தரம் | பாடங்கள் | மாணவர் பெயர் |
|---|---|---|---|
| 01 | 04 | சைவசமயம்<br>ஆங்கிலம்<br>கணிதம்<br>சுற்றாடல்<br>ஆக்கம்<br>அழகியல்<br>தமிழ்மொழி | செல்வி. M. ரிதுசன்யா |
| 02 | | சிங்களம் | செல்வன். H. நேருஷான் |
| 03 | 05 | சைவசமயம்<br>தமிழ்மொழி<br>ஆங்கிலம்<br>கணிதம்<br>சுற்றாடல்<br>ஆக்கம்<br>அழகியல்<br>சிங்களம் | செல்வி. U. சஸ்திகா |
| 04 | 06 | கணிதம்<br>விஞ்ஞானம்<br>சைவசமயம்<br>புவியியல்<br>வாழ்க்கைத்தேர்ச்சியும் - குடியுரிமைக்கல்வியும்<br>செயன்முறைத்தொழில்நுட்பம்<br>சுகாதாரமும் உடற்கல்வியும்<br>சித்திரம்<br>சிங்களம் | செல்வி. D. கோகிலா |
| 05 | | தமிழ்<br>ஆங்கிலம் | செல்வி. R. தனுசியா |
| 06 | | வரலாறு<br>நடனம் | செல்வி. D. நிஷாந்தினி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | தரம் | பாடங்கள் | மாணவர் பெயர் |
|---|---|---|---|
| 07 | 07 | தமிழ்<br>விஞ்ஞானம்<br>வரலாறு<br>சுகாதாரமும் உடற்கல்வியும் | செல்வன். A. அர்ஜுன் |
| 08 | | கணிதம்<br>சைவசமயம்<br>வாழ்க்கைத்தேர்ச்சியும் - குடியுரிமைக்கல்வியும் | செல்வி. S. சம்மியா |
| 09 | | ஆங்கிலம்<br>சிங்களம் | செல்வன். R. டில்சான் |
| 10 | | செயன்முறைத்தொழில்நுட்பம்<br>சித்திரம் | செல்வன். S. சதீஸ் |
| 11 | | நடனம்<br>புவியியல் | செல்வன். R. சுஜீவன் |
| 12 | | கிறிஸ்தவசமயம் | செல்வன். S. றொட்னி |
| 13 | 08 | தமிழ்<br>கணிதம்<br>விஞ்ஞானம்<br>புவியியல்<br>வரலாறு<br>சுகாதாரமும் உடற்கல்வியும்<br>சிங்களம் | செல்வன். S. நிலுக்சன் |
| 14 | | ஆங்கிலம்<br>சைவசமயம்<br>வாழ்க்கைத்தேர்ச்சியும் - குடியுரிமைக்கல்வியும்<br>செயன்முறைத் தொழில்நுட்பம்<br>சித்திரம் | செல்வன். K. பிரதீபன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | தரம் | பாடங்கள் | மாணவர் பெயர் |
|---|---|---|---|
| 15 | 09 | விஞ்ஞானம்<br>சைவசமயம்<br>செயன்முறைத் தொழில்நுட்பம் | செல்வி. G. சங்கரிபிரீதா |
| 16 | | புவியியல்<br>வரலாறு<br>வாழ்க்கைத் தேர்ச்சியும் - குடியுரிமைக்கல்வியும்<br>சிங்களம் | செல்வி. R. சிந்துஜா |
| 17 | | தமிழ்<br>நடனம் | செல்வி. B. வினோஜா |
| 18 | 10 | தமிழ்<br>கணிதம்<br>விஞ்ஞானம்<br>ஆங்கிலம்<br>சைவசமயம்<br>வரலாறு<br>மின்னியல்<br>தமிழ் இலக்கிய நயம் | செல்வன். R. சதீஸ் |
| 19 | | புவியியல் | செல்வி. B. ஸ்ரீபிரியா |
| 20 | | விவசாயம் | செல்வி. B. ஜனனி |
| 21 | 11 | தமிழ்<br>ஆங்கிலம்<br>வர்த்தகம்<br>தமிழ் இலக்கிய நயம் | செல்வி. R. சுஜந்தி |
| 22 | | விஞ்ஞானம்<br>வரலாறு<br>நடனம்<br>கணிதம்<br>மனைப் பொருளியல் | செல்வி. R. நிரோசினி |
| 23 | | சைவசமயம்<br>மின்னியல் | செல்வி. L. வக்சினி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | தரம் | பாடங்கள் | மாணவர் பெயர் |
| --- | --- | --- | --- |
| 24 | 12 | தமிழ் | செல்வன். ஞா. பெலிக்ஸ் பெர்னான்டோ |
| 25 | | புவியியல் | செல்வன். T. பார்த்தீபன் |
| 26 | | அரசியல் விஞ்ஞானம் | |
| 27 | | ஆங்கிலம் | செல்வன். T. அன்ரனி லக்சன் |
| | 13 | | |
| 28 | | தமிழ் புவியியல் | செல்வி. S. அமீனா |
| 29 | | அரசியல் விஞ்ஞானம் | செல்வி. K. அனுசியா |
| 30 | | ஆங்கிலம் | செல்வன். மார்ட்டின்-பெனடிக் சேவியர் |

## Grade 5 Scholarship Examination
## Results Analysis

| ஆண்டு | சித்தியடைந்தோர் | 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் |
| --- | --- | --- |
| 2007 | B. வினோஜா - 145 | M. பிரமிளா - 135 |
| 2008 | S. நிலுக்ஷன் - 128 | ------ |
| 2009 | S. சம்மியா - 142 | R. சஜீவன் - 128 |
| | A. அர்ஜுன் - 142 | V. சதீஸ் - 121 |
| | ------ | M. டில்ஷான் - 117 |
| | ------ | R. டில்ஷான் - 118 |
| 2010 | D. கோகிலா - 163 | T. வேகா - 140 |
| | C. சுரேஸ் கோபி - 171 | D. நிஷாந்தனி - 130 |
| | ------ | S.R. தனுசிகா - 109 |
| | ------- | S. நிதர்ஷன் - 100 |
| 2011 | ------- | R. பிரியதர்சன் - 110 |
| | ------- | K. சிமியோன் - 117 |
| | ------- | S. சரண்யா - 110 |
| | ------- | P. தனுஷியா - 144 |
| | ------- | D. சஸ்திகாபானு - 145 |
| 2012 | M.ரிதுஷன்யா - 170 | H. நேருஷான் - 132 |
| | ------- | T.R. பார்த்தீபா - 117 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருவே!

உலகத்தின் இருளகற்றப் புறப்பட்ட சூரியனே
மேகத்திரை கிழித்து
மின்னிடும் தாரகைபோல் - மன
மாய இருள் அகற்றும்
மரகதம் நீ
உன்னை ஏணியாக்கி - அதில்
எத்தனை பேரை ஏற்றியிருக்கின்றாய்
ஏறியவர்கள் எங்கோ சென்றுவிட்டார்கள் - நீ
இன்னும் ஏணியாகவே இருக்கின்றாய்
உனக்கல்லாவிடினும் ஊருக்கு
மற்றோர்க்கு இது மடமைத்தனம்
உனக்கென்றால் இதுவே வேதமந்திரம்

குருவே!

உலகத்தின் இருளகற்ற புறப்பட்ட சூரியனே - நீ
உலகத்திற்கு மட்டுமா ஒளியேற்றினாய்
உள்ளங்களுக்கெல்லாம் ஒளிவிளக்கானாய்

ஏணியாய் பலரை ஏற்றிவிட்டவன் நீ
எரிமலைகள் பலதை தோற்றுவித்தவன் நீ
பகுத்தறிவை ஊரெல்லாம் விதைத்தவன் நீ
பல பேர் வாழ வழி சொன்னவன் நீ

காவியம் பலதை படைத்தவன் நீ
கவினூறு ஓவியம் வடித்தவன் நீ
ஊரிலும் உலகிலும்
வாழ்கின்ற பலருக்கு
ஒளிச்சுடர் தீபம் தந்தவன் நீ

விஞ்ஞான விந்தைகள் படைத்தவன் நீ
மெய்ஞ்ஞான குருவாய் திகழ்ந்தவன் நீ
அஞ்ஞானம் அகற்றும் அருவியும் நீ
அறிவுடன் மாந்தரை வளர்ப்பவன் நீ

எந்திரம் செய்பவனுக்கு ஏடு தொடக்கியதும்
வைத்தியம் புரிபவனுக்கு வார்த்தை சொல்லிக்கொடுத்ததுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுகின்ற அரசனுக்கு அறிவாற்றல் தந்தவனும்
அகிலத்தில் நீயன்றோ ஆண்டவனுக்கு அடுத்தபடி

தந்தையாய் தாயாய்
தட்டிக் கொடுக்கும் தனயனாய்
ஏற்ற நண்பனாய் - நீ
எடுக்கும் அவதாரங்கள் எத்தனை

மண்ணுக்கு விடிவு சூரியன் ஒளிமழையில்
மனிதனுக்கு விடிவு ஆசிரியர் கரங்களில்

குருவே!

உலகத்தின் இருளகற்ற புறப்பட்ட சூரியனே
வாழ்க வையகம் நிலைக்கும் மட்டும்
குருவே நீ வாழ்க
உன்னை கும்பிடுகிறேன்
நீ வாழ்க!
நீடுழிவாழ்க!

**திருமதி** S. **சிவகுமாரி**
ஆசிரியர்

# பொன் மொழிகள்

- ஓர் அவுன்ஸ் தைரியமே ஒரு தொன் துன்பத்தை துடைப்பதற்குப் போதுமானது.

- எழு, விழி, குறிக்கோள் கிட்டும் வரை நின்றுவிடாதே. உரமாக இரு. துணிச்சலாக இரு. வலிமை அவசியமானது. நீயே உனது விதியின் கர்த்தா. உனது வலிமை எல்லாம் உன்னுள்ளே உள்ளது.

- நீங்கள் தனிமையாக இருந்தால் பெறுமதியற்றவர். ஆனால் மக்கள் மத்தியில் அன்பாகவும், இனிமையாகவும், ஒத்துழைப்பவராகவும் இருந்தால் பெறுமதி மிக்கவர் ஆவீர்கள்.

- சிலவற்றை விளங்கிக் கொள்வதற்கு ஞானம் தேவை, ஆனால் உணர்வதற்கு அனுபவம் தேவை.

- பணக்காரனின் செல்வம் களவாடப்படலாம் அல்லது எரிக்கப்படலாம், ஆனால் புத்திசாலியின் மகிழ்ச்சியும் அறிவும் நிலைத்து நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# KANDY KING MEDICAL

*Pharmaceuticals & Grocery*

# 51, Peradeniya Road,
Kandy.

*(Opp-Wembley Theater)*

Tel: 081 - 2202306




*With Best Compliments From:*

# SAFEWAY

43, Yatinuwara Veediya,
Kandy.

Tel: 081 - 2222727

*With Best Compliments From:*

# Ravi Jewellers

For 22 Carat Sovereign &
Pawn Brokers

# 95, Colombo Street,
Kandy.

Tel: 081 - 2205045

*With Best Compliments From:*

# New National Colour Centre

*Hardware Merchants, Dealers in Brass Window Fittings, Door Locks, All kinds of Scales & Asian Paints Suppliers*

# 187, Colombo Street,
Kandy.

Tel: 081 - 4941931
Fax: 081 - 2232022
Scales: 0777 - 247437



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*
*From:*

# SINGHE TRADERS

*Wholesale & General Merchants*
*for Chillies, Potatoes, Onions,*
*Sugar, Coconut Oil,*
*Dhal Spice & Other Food Items*

***Singhe Rice Distributors***

**174, Colombo Street,**
**Kandy.**

**Tel: 081 - 2225799**
**081 - 4950925**

*With Best Compliments*
*From:*

# L.K. DISTRIBUTOR

*Agent For:*
*CRYSBRO Chicken*

**24, Central Market,**
**Kandy.**

**Tel: 081 - 2202709**
**077 - 3477385**
**075 - 0650355**

*With Best Compliments From:*

# Kandy Drapers

**HOME DECOR**

*For Excellent Vertical Blinds,*
*Curtaining, Carpeting, Polls,*
*Railing & Upholstery with*
*Tailoring & Complete Service*

**No. 405, Peradeniya Road,**
**Kandy.**

**Tel: 081 - 2222174**
**Fax: 081 - 2205774**

*With Best Compliments From:*



# THE GREEN SUPER

*Indian Food Products, Sweets,*
*Cosmetics & Baby Items*

**# 336, Peradeniya Road,**
**Kandy.**

**Tel: 0777 - 393477**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

අපෙන් සුභ පැතුම් !

# අවන්හල

ඔබගේ සියළුම උත්සව අවශ්‍යතාවයන් සඳහා
පුනීත/පිරිසිදු පෙර / අපරදිග ආහාර සමඟ
කේටරින් සේවාව

අංක 17, දිගන රජවැල්ල.
**072-9603555**
**071-3228336**

*With Best Compliments From:*

# DEEPA MEDICAL

**# 179/B, Colombo Street,**
**Kandy.**

**Tel: 081 - 3995564**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# R.T. OIL STORES

IMPORTERS OF EDIBLE OIL

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

**# 178, Colombo Street, Kandy.**

**Tel: 081-2202203, 081-5636266**
**Fax: 081-2202203**

**# 77, 79, Wolfendhal Street, Colombo - 13**

**Tel: 011 - 2391352, 2391353**
**Fax: 011 - 2391353**

*With Best Compliments From:*



# *Maruthy Textile*

WHOLESALE & RETAIL DEALERS IN TEXTILES

**# 63, Yatinuwara Street,**
**Kandy**

**Tel: 081-2236384, 081-7215519**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க/தலாத்துஓயா தமிழ் மகா வித்தியாலயம்

## பரிசளிப்பு விழா – 2012

## விழா ஏற்பாட்டுக்குழு

**தலைவர்: திரு V. தங்கவேல் (அதிபர்)**

**கலைவிழா இணைப்பாளர்:** திரு E. இந்திரகுமார் ( பிரதி அதிபர்)

**வரவேற்பு**
திருமதி K. சாந்தி
திருமதி C. கௌசல்யா

**உபசரணை**
திருமதி N. தில்லைநாயகி
திருமதி C.D. சாமுவேல்
திருமதி S. கோமதி
திருமதி E.G. சவரியப்பர்

**மேடை, மண்டப அலங்காரம்**
திருமதி S.J.T. டிலக்ஷனி
திருமதி M. டல்சிபிரிடா
திருமதி V.M. மேனகா

**நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு**
திரு S. செல்வகதிர்காமர்
திருமதி A. சந்திரகுமாரி

**கலை நிகழ்ச்சிகள்**
செல்வி S. கோமதி
திருமதி S.J.T. டிலக்ஷனி

**அழைப்பிதழ்**
திரு E. இந்திரகுமார் (பிரதி அதிபர்)
திருமதி S. இராதை

**சஞ்சிகை**
திருமதி A. சந்திரகுமாரி
திருமதி S. இராதை

**பரிசளிப்பு ஒழுங்கமைப்பு**
திருமதி P. இரவிச்சந்திரன்
திருமதி B. இராமச்சந்திரன்

**மாணவர் ஒழுங்கு**
திரு S. செல்வகதிர்காமர்
திருமதி B. இராமச்சந்திரன்
திருமதி V. செல்வமலர்
திருமதி. கிஷானி பெர்ணான்டோ

**பாடசாலை அலங்காரம்**
திரு S. சசிகுமார்
திருமதி S. பஞ்சகல்யாணி
திருமதி K. கலைவாணி
திருமதி S. சிவகுமாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலம் பெருக வாழ்த்தி நவில்கின்றோம் நன்றிகளை...

எமது பாடசாலையின் பரிசளிப்பு விழாவிற்கு எமது அழைப்பை ஏற்று இன்முகத்துடன் வருகைத் தந்த


- பிரதம அதிதி, கௌரவ அதிதிகள், சிறப்பு அதிதிகள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், அயற்பாடசாலை அதிபர்கள், முன்னாள் பாடசாலை அதிபர்கள், நலன்விரும்பிகள், இப்பாடசாலையில் சேவையாற்றிய முன்னாள் ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
- ஏனைய விசேட, சிறப்பு அதிதிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
- இவ்விழாவினை மெருகூட்ட உதவிபுரிந்த சங்கீத, நடன, ஆசிரியர்களுக்கும், இவ்விழா மண்டபத்தினைப் பிரகாசிக்கச் செய்த ஒலி, ஒளி வீடியோ படப்பிடிப்பாளர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
- மேலும் இவ்விழாவினை மேம்படுத்திய விளம்பரதாரர்கள் நன்கொடையாளர்கள் அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.
- முத்தமிழ் நாதம் சஞ்சிகைக்கு ஆக்கங்களைத் தந்துதவிய ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும், நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
- அடுத்து இம்முத்தமிழ் நாத சஞ்சிகையினை கணனியில் வடிவமைத்த செனித் அச்சகம் திரு. ந. மனோஜ் அவர்களுக்கும், அச்சுப்பதித்த வினோ அச்சகத்தாருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.
- உரிய நேரங்களில் ஆலோசனைகள் வழங்கி நெறிப்படுத்திய பரிசளிப்பு விழா ஏற்பாட்டுக் குழுவினருக்கும் பெற்றோர், பெரியோர், பழைய மாணவர், நலன் விரும்பிகள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.
- இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு பல்வேறு வழிகளில் உதவிபுரிந்த அனைவருக்கும் இவ்வேளை நன்றிகள் பல நவில்கின்றோம்.
- மேலும் இப்பரிசளிப்பு விழாவிற்கான பரிசுப் பொருட்கள் தந்துதவிய பெருந்தகைகளுக்கும் மற்றும் சகலவழிகளிலும் உதவிகளை நல்கிய அனைவருக்கும் நமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*












# Luckyland

# TASTIER
# &
# ENERGY FOODS

## LUCKYLAND BISCUIT MANUFACTURERS

**KUNDASALE, KANDY - SRI LANKA.**

**TEL: 0094-081-2420574, 2420217,**
**FAX: 0094-081-2420740**

**E-mail: luckyland@sltnet.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

*New*

# PRIYA STORES

**DEALERS IN GROCERIES HOTEL SUPPLIERS,**
**FROZEN FOODS ETC.,**

**# 125 C, D.S. Senanayake Veediya,**
**Kandy.**

**(Kandy City Mission Building)**

**Tel: 081 - 2223979, 081 - 2223551**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org